பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 13 புதன்கிழமை 28.07.2021 கதிர் 265

## இனி இது ரகசியம் அல்ல!

வடக்கில் சூரியன் உதித்தாலும் தனது அரசியல் நிகழ்ச்சித் திட்டத்தில் தான் போட்ட நேரப்படிதான் அது உதித்தது என்று உரிமை கோரும் நமது அமுல்பேபி அரசியல்வாதிக்கு ராஜபக்ஷக்கள் சரியான 'செக்மேட்'டைச் சரியான முறையில்

பக்கம்02

# பந்துலசேனவின் நியமனத்தை நிறுத்தாவிடின் ராஜபக்ஷ அரசுக்கு எதிராக மாற்று நடவடிக்கை

## இப்படி எச்சரிக்கின்றார் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை



வடக்கு மாகாண சபையின் புதிய பிரதம செயலாளர் சமன் பந்துலசேனவினுடைய நியமனத்தைத் திரும்பப்பெற்று தமிழ் மக்கள் மத்தியில் நிர்வாகத்தை நடத்துவதற்கு அவர்களது மொழியிலே நிர்வாகத்தை முன்னெடுக்கக்கூடிய ஒருவரை நியமிக்குமாறு நாங்கள் அரசைக் கோருகின்றோம். இல்லையேல் ராஜபக்ஷ அரசுக்கு எதிராக நாம் மாற்று நடவடிக்கையை எடுக்க வேண்டி வரும்.

–இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் இலங்கைத் தமிழரசுக் 2

# வட, கிழக்கில் பிரதேச செயலர்களாக சிங்களவரை நியமிக்க அரசு திட்டம்

## ஒன்லைன் மூலம் அமைச்சு விண்ணப்பம் கோரல்

(ந.லோகதயாளன்)


**வடக்கு, கிழக்கில் பிரதேச செயலாளர் மற்றும் உதவிப் பிரதேச செயலாளர் பதவிகளுக்குப் பணியாற்ற விரும்பும் சிங்கள அதிகாரிகளிடம் இருந்து உள் நாட்டு அலுவல்கள் அமைச்சால் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.** 2

## வட்டுவாகலில் இராணுவத்தினர் நாளை காணி சுவீகரிக்க முயற்சி

### தடுத்து நிறுத்த சிவாஜிலிங்கம் அழைப்பு

முல்லைத்தீவு – வட்டுவாகலில் நாளை காணியை அபகரிக்க இராணுவம் எடுக்கும் முயற்சியை ஒன்றுதிரண்டு எதிர்க்க அனைவரும் முன்வர வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.கே. சிவாஜிலிங்கம் 2

## பிரதமருடனான பேச்சு தோல்வி; தொடரும் ஆசிரியர் போராட்டம்



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் நேற்று நேரில் நடத்திய பேச்சு தோல்வியில் நிறைவடைந்தது என அதிபர் 2

## 1,688 பேருக்கு நேற்று தொற்று

இலங்கையில் மேலும் 1,688 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா 11

## 48 பேர் சாவு!

இலங்கையில் மேலும் 48 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் சாவடைந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள 2

## யாழில் மேலும் ஒருவர் மரணம்

யாழ்ப்பாணத்தில் மேலும் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த உடுவிலைச் சேர்ந்த 75 வயதுடைய ஆண் ஒருவரே நேற்று இவ்வாறு சாவடைந்துள்ளார்.

## வடக்கில் தடுப்பூசி நாளை தொடக்கம்

(இ.கலையமுதன்)

வடக்கு மாகாணத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ள 3 இலட்சத்து 75 ஆயிரம் 'சினோபாா்ம்' கொரோனாத் தடுப்பூசிகளை 30 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும், 18 வயதுக்கு 11






## இனி இது...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வைத்திருக்கின்றது. நேற்று அதுதான் வடக்கில் பலரினதும் அரசியல் பேசு பொருளாக இருந்தது.

கொரோனாத் தடுப்பூசி வழங்கலை ஆரம்பித்த அரசு மாவட்டங்கள் தோறும் அதனை வழங்குவதற்குப் பிரித்துப் பிரித்து அனுப்பி வருகின்றது.

அப்படி யாழ்.மாவட்டத்துக்கு அனுப்பப்படும் தடுப்பூசிகளை மாகாணப் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளரின் வழிகாட்டலில் மாவட்ட அதிகாரிகள் பிரித்து மருத்துவ அதிகாரிகள் பிரிவுகள் ஊடாக மக்களுக்கு செலுத்தி வருகின்றனர்.

அது பற்றிய விநியோக அட்டவணை கிடைத்தும் உடனே அது தனது வழிகாட்டலில் - பணிப்பில் - யாழ்.மக்களுக்குக் கிடைப்பதாக வழமை போல படம் காட்டுவது நமது அமுல்பேபியின் வேலை. பலருக்கும் தெரிந்த பரகசியம் இது.

விடயம் தெரிந்தோர், கொடுப்புக்குள் சிரித்துக் கொண்டு, இந்த 'அடாத்து' விளம்பரப் பிரியர் குறித்து தமது மனதிற்குள் எடை போட்டபடி சென்று விடுவர்.

கடைசித் தடவையாகவும் யாழ்ப்பாணத்துக்கு ஐம்பதாயிரம் தடுப்பூசியை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒழுங்கு பண்ணி அனுப்ப, வழமைபோல வழித் தேங்காயைத் தெருப் பிள்ளையாருக்கு அடிப்பது போல தன்னுடைய முயற்சியில் அது யாழ்ப்பாணத்துக்கு வருவதாகக் கயிறு விட்டார் நம் அமுல்பேபி.

சரி. அடுத்த முறை பார்த்துக் கொள்வோம் என்று முணுமுணுத்தபடி, விவகாரத்தைக் கவனிக்காமல் விட்டதை போல விட்டேத்தியாக நடந்து கொண்டார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

என்ன செய்தார், ஏது செய்தார் என்று தெரியவில்லை. தடுப்பூசி வழங்கல் சேவையில் யாருடையதோ நடவடிக்கையைத் தன்னுடையதாகக் காட்டும் அமுல் பேபியின் செயற்பாட்டுக்கு ராஜபக்ஷக்கள் மூலமே ஆப்பு வைத்து விட்டார் அமைச்சர் டக்ளஸ்.

வடக்கு, கிழக்குக்கு விநியோகிக்க வென சீனா அன்பளித்த 16 லட்சம் தடுப்பூசியையும் சீனத் தூதுவரைக் கொண்டே அமைச்சர் டக்ளஸிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்க வைத்து விட்டார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. தானே நேரில் நின்று இந்தக் காரியத்தை அவர் செய்வித்திருக்கின்றார்.

இனி, மளமளவென்று வடக்கு, கிழக்கில் முப்பது வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை விரைந்து நடக்கும்.

அது நடக்கத் தொடங்கியதும் வழமை போல தன் பணிப்பின் பேரில்தான் இது நடக்கின்றது என்று படம் காட்டுவார் அமுல் பேபி. வெட்கப்பட்டுத்தன்னும் அதை அவர் நிறுத்த மாட்டார். ஏன் என்றால் நம் அரசியல்வாதிகள் பலருக்குத்தான் வெட்கம், சூடு, சுரணை, தன்மானம் ஏதும் கிடையாதே...!

ஆனாலும், இனிமேல் வடக்கில் விறு விறுவென்று மக்களுக்குக் கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்படும் போது அதற்கு அமுல்பேபி உரிமை கோரினாலும், அமைச்சர் டக்ளஸிடம் சீனா ஒப்படைத்த வற்றை நான் உங்களுக்கு அவரிடமிருந்து வாங்கித் தருகிறேன் என்றுதான் யாழ்.மக்களுக்குக் கயிறு விட முடியும்.

இவ்விடயத்தில் இன்னொரு அரசியல் சூத்திரமும் ஆழமாகப் புதைந்திருப்பதை நாம் பார்க்க வேண்டும்.

மற்றைய நாட்டுத் தயாரிப்புகளுக்கு காத்திருந்த இலங்கை கடைசியில் அவை சரிவராது என்ற முடிவில் சீனாவின் தயவை நாடியது. சீனாவும் இயன்ற வரையில், இயன்ற அளவில், விரைந்து ஊசிகளை அள்ளிக் கொடுக்கின்றது. ஒரு தொகை நிதிக் கொடுப்பனவுக்கு - அல்லது கடனுக்கு வழங்கப்படுகின்றது.

அதே சமயம் பல மில்லியன் ஊசிகளை அன்பளிப்பாகவும் - வெகுமதியாகவும் - இலங்கைக்கு வழங்குகின்றது சீனா.

சர்வதேச அரசியல் ஊடாட்டத்தில் இலங்கை சீனாவுடன் அணி வகுத்து நிற்பதின் பிரதி பலன் இது.

ஆனால், ஒரு புறம் இந்தியாவை விடுத்து - அல்லது புறம் ஒதுக்கி - அல்லது ஆபத்தில் ஆழ்த்தி - மறுபுறத்தில் சீனாவுடன் கொழும்பு கைகோர்ப்பதை வடக்கு, கிழக்குத் தமிழர்கள் அடியோடு எதிர்க்கின்றார்கள். சீனா - இலங்கை நட்புறவை விட இலங்கை - இந்திய நட்புறவையே முன்னிலைப்படுத்த வேண்டும் என்பதே பெரும்பாலான இலங்கைத் தமிழர்களின் கருத்து நிலைப்பாடாக உள்ளது. இதனால் தமிழர் தாயகத்தில் - வடக்கு, கிழக்கில் - சீன எதிர்ப்புணர்வுச் சிந்தனை ஒன்று ஆழமாக வேரோடி வருவது கண்கூடு.

அந்தச் சூழ்நிலையில்தான் -

சீனா கடைசியாக அன்பளிப்பாக - வெகுமதியாக - கொடுத்த பதினாறு லட்சம் தடுப்பூசிகளையும் வடக்கு, கிழக்கிற்கான - சீனாவின் நட்புறவு அன்பளிப்பு என்று காட்டி, தமிழ்த் தலைவரான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவையே அதைப் பொறுப்பேற்கச் செய்திருக்கின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

இனிமேல், வடக்கு, கிழக்கில் - தமிழர் தாயகத்தில் இருந்து, அரசியல் பேசும் முப்பது வயதுக்கு மேற்பட்ட எவரும், தங்கள் உடலில் இருக்கும் கொரோனா வைரஸ் தடுப்பு திறன் சீனாவின் நன்கொடையில் - அன்பளிப்பில் - வெகுமதியில் - கிடைத்த வலிமை என்பதை மறந்தும் பேச முடியாது.

அடேங்கப்பா... என்ன மாதிரித் திட்டம் இது. வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது மாதிரி, சீனா மீது தமிழர்கள் நன்றி பாராட்டுவதற்கான உணர்வை ஊசியாக ஏற்றுகின்றார் கோட்டா. நல்ல மதியூகிதான் பாருங்கோ...!

- மின்னல் -

## வட, கிழக்கில்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நிர்வாக சேவை சேவையில் உள்ள சிங்கள அதிகாரிகள் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பிரதேச செயலாளராகவோ அல்லது உதவிப் பிரதேச செயலாளராகவோ பணியாற்ற விரும்பினால் விண்ணப்பிக்க ஒன்லைன் ஊடாக விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

தமிழர்கள் அதிகம் வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழர்களின் இன விகிதாசாரத்தைக் குறைக்கும் வகையிலும், சிங்களக் குடியேற்றங்களை அதிகரிக்கும் நோக்கிலும் அரசு செயற்படுவதாகத் தொடர்ச்சியாகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்படும் நிலையில் தற்போது தெற்கில் உள்ள சிங்கள அதிகாரிகளை வடக்கு,கிழக்கு தமிழ்ப் பகுதிகளில் பணியாற்ற விரும்புபவர்களையும் விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் புதிய பிரதம செயலாளர் ஏற்கனவே சிங்கள இனத்தவர் நியமிக்கப்பட்டுள்ளமையுடன் யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபரும் சிங்களவராக நியமிக்கப்படலாம் என்ற சர்ச்சை உருவெடுத்துள்ளது.

இதேநேரம் தற்போது வடக்கு, கிழக்கில் பிரதேச செயலாளர்களாகவும் சிங்கள இனத்தவர்களை நியமிக்கும் இரகசியத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

## பந்துலசேனவின்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா.

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வடக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் ஆகியோருடனான கலந்துரையாடலின் பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்றைக்குப் பேசுபொருளாக இருக்கின்ற வடக்கு மாகாண சபையின் புதிய பிரதம செயலாளர் சமன் பந்துலசேனவின் நியமனம் தொடர்பில் நாங்கள் ஆராய்ந்தோம். ஜனாதிபதியின் இந்த நியமனத்தை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம்.

வடக்கு, கிழக்கு மாகாண சபைகளில் மிகப் பெரும்பாலான தமிழ் மக்கள் தங்களுடைய மொழியில் தங்களுடைய நிர்வாகத்தைக் கையாள்வதற்கே விரும்புகின்றார்கள். அப்படி ஓரளவிற்கேனும் கிடைத்த உரிமையை நாங்கள் இழக்கக்கூடாது என்பதற்காக மொழி உரிமையையும், தங்களுடைய நிர்வாகத்தை தாங்களே கையாள்வதற்கான உரிமையையும் நிலைநாட்ட வேண்டும் என்பதற்காகத் தான் சிங்கள அதிகாரியான சமன் பந்துலசேனவினுடைய நியமனத்தை திரும்பப் பெற்று எங்கள் மக்கள் மத்தியில் நிர்வாகத்தை நடத்துவதற்கு அவர்களது மொழியிலே நிர்வாகத்தை முன்னெடுக்கக் கூடிய ஒருவரை நியமிக்குமாறு நாங்கள் அரசைக் கோருகின்றோம். இல்லையேல் ராஜபக்ஷ அரசுக்கு எதிராக நாம் மாற்று நடவடிக்கையை எடுக்க வேண்டி வரும்.

மாகாண சபையின் பிரதம செயலாளர் பதவிக்கு தமிழ் மக்கள் மத்தியில் தகுதியுடைய எத்தனையோ பேர் இருக்கின்றார்கள். சித்தியடைந்தவர்கள், அனுபவம் மிக்க ஆளுமையுள்ளவர்கள் இருக்கின்றார்கள். அவர்களிலிருந்து ஒருவரை பிரதம செயலாளராக வடக்கு மாகாண சபைக்கு நியமிக்க வேண்டும் என்று இந்தக் கூட்டத்தில் தீர்மானத்தை எடுத்திருக்கின்றோம்.

அரசும், ஜனாதிபதியும் தன்னிச்சையாகவும், ஜனநாயகத்திற்கு விரோதமாகவும், நடைமுறைகளுக்கு விரோதமாகவும் இவ்வாறான செயற்பாடுகளை செய்யாமல் இருப்பதற்கு நாங்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் எனவும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

எங்களுடைய தேசத்தில் நாங்கள் எங்களை ஆளுவதற்கும், எங்களுடைய பண்பாடு, மொழி, கலை, கலாசாரங்களை நாங்களே கையாள்வதற்கும், எங்கள் மக்களையும், தேசத்தையும், ஆட்சி உரிமையையும் பாதுகாப்பதற்காகவும் அனைவரும் ஒன்றாக அணிவகுத்துச் செயற்பட வேண்டும் என்பதையும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் வலியுறுத்தியிருக்கின்றார்கள்.

எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றுபட்டு வடக்கின் புதிய பிரதம செயலாளரை மாற்றி தமிழ் மக்களின் விருப்பத்துக்கு அமைவாக தமிழ் மொழியில் கடமையாற்றக்கூடிய தலைமை நிர்வாகி ஒருவரை நியமிப்பதற்கு அரசுடன் பேச வேண்டும் என்றும் தீர்மானித்திருக்கின்றோம்.

அல்லது அடுத்தகட்ட நடவடிக்கை என்னவாக இருக்க வேண்டும் என்பது தொடர்பில் ஒன்றுகூடித் தீர்மானம் எடுக்க வேண்டும் என்றும் நாங்கள் தீர்மானித்திருக்கின்றோம் - என்றார்.

## பிரதமருடனான...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

- ஆசிரியர் சங்கங்கள் தெரிவித்துள்ளன .

குறித்த கலந்துரையாடல் அலரி மாளிகையில் சுமார் 2 மணிநேரம் இடம்பெற்றது எனவும், அந்தக் கலந்துரையாடலில் தங்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை எனவும் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோது இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

தங்களுடைய கோரிக்கைகள் நிறைவேறும் வரையில் இணையவழி கற்பித்தல் புறக்கணிப்பு தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவோம் எனவும் அவர் மேலும் கூறினார்.

இதேவேளை, அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட கோரிக்கைகளுக்கான இறுதி முடிவு எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்துக்குப் பின்னர் எடுக்கப்படும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்றைய சந்திப்பில் தெரிவித்தார் என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அதன்படி, அடுத்த திங்கட்கிழமை முதல் பணிக்குத் திரும்பத் தயாராக இருப்பதாக அதிபர்கள், ஆசிரியர்கள் தொழிற்சங்கங்கள் அறிவித்தன என்றும் பிரதமர் அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது.

## வட்டுவாகலில்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாளை முல்லைத்தீவு - வட்டுவாகல் கோட்டாபய கடற்படை முகாம் அமைக்கப்பட்டுள்ள காணியை நில அளவை மேற்கொண்டு அபகரிப்பதற்காகக் காணி உரிமையாளர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு சுவீகரிக்கப்பட்ட காணிகளை சீனாவுக்கு விற்பதற்கான நடவடிக்கைகளே இடம்பெறுகின்றன.

கொரோனாவைப் பயன்படுத்தி இராணுவ நில அளவையாளர்கள் மூலம் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் பல ஏக்கர் காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளன.

எனவே, காணிச் சுவீகரிப்பை தடுத்து நிறுத்த தமிழ்த் தேசிய உணர்வாளர்கள், அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்கள் அனைவரும் நாளை ஒன்றுதிரள வேண்டும் - என்றார்.

## 48 பேர் சாவு...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 48 பேரில் 28 ஆண்களும், 20 பெண்களும் அடங்குகின்றனர்.

இதன்படி நாட்டில் இதுவரையில் பதிவாகியுள்ள கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 4 ஆயிரத்து 195 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் நாட்டில் கடந்த 5 நாள்களில் 236 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, கடந்த 22 ஆம் திகதி 43 சாவுகளும், 23ஆம் திகதி 52 சாவுகளும், 24 ஆம் திகதி 45 சாவுகளும் பதிவாகியுள்ளன.

அத்துடன், கடந்த 25, 26ஆம் திகதிகளில் தலா 48 சாவுகள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர் Kalaikkathir

# ஹிஷாலினியின் மரணத்துக்கு நீதி கோரி கொட்டகலையில் கவனவீர்ப்பு போராட்டம்






கொட்டகலை - திம்புள்ள தோட்டத்தில், சிறுமி ஹிஷாலினியின் மரணத்துக்கு நீதி கோரி பாரிய போராட்டமொன்று நேற்று (செவ்வாய்க்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

தலவாக்கலை, நாவலப்பிட்டி, திம்புள்ள பகுதியிலுள்ள அம்மன் ஆலயத்துக்கு முன்பாக அப்பகுதியிலுள்ள பெருந்தோட்டத் தொழிலாளர்களால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் வேலை செய்த நிலையில் மர்மமான முறையில் உயிரிழந்த சிறுமியின் மரணத்துக்கான காரணம் கண்டறியப்பட வேண்டும், தரகர் முதல் சிறுமியை வேலைக்கு அமர்த்தியவர்கள் வரை இதனுடன் தொடர்புபட்ட அனைவருக்கும் தண்டனை வழங்கப்பட வேண்டும் என அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளனர்.

மேலும் வீட்டுப் பணியாளர்களாக செல்லும் பெண்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும், பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கண்டித்தும் அவர்களுக்கான உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் இல்லத்துக்குக் கடந்த 2020 ஆம் ஆண்டு பணிக்குச் சென்ற 16 வயதுடைய சிறுமி, இம்மாதம் 3 ஆம் திகதி தீக் காயங்களுடன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், கடந்த 15ஆம் திகதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்திருந்தார்.

அதனைத்தொடர்ந்து, மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கையில் மேற்படி சிறுமி நீண்ட காலமாக பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டிருந்தமை தொடர்பில் தெரியவந்தமை குறிப்பிடத்தக்கது.

## 16 லட்சம் சினோபோர்ம் தடுப்பூசி நாடு வந்தது

கொழும்பு, ஜுலை 28

மேலும் 16 லட்சம் டோஸ் சினோபோர்ம் கொரோனாத் தடுப்பூசிகள் நேற்று (செவ்வாய்க்கிழமை) இலங்கையை வந்தடைந்துள்ளன.

சீனாவில் இருந்து விசேட விமானமொன்றின் மூலம் குறித்த தடுப்பூசிகள் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு கொண்டு வரப்பட்டன.

கடந்த 22 ஆம் திகதி சினோபோர்ம் தடுப்பூசியின் 20 லட்சம் டோஸ் கொரோனாத் தடுப்பூசிகள் இலங்கையை வந்தடைந்தன.

சீனாவிடமிருந்து 60 லட்சம் டோஸ் தடுப்பூசிகள் இலங்கைக்கு நன்கொடையாகக் கிடைத்தமையை அடுத்து மீதமுள்ள தடுப்பூசிகள் அனைத்து சீன உற்பத்தியாளரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## அரிசி வகைகளின் விலை அடுத்த வாரம் குறையும்

### அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவிப்பு

அரிசி ஆலை உரிமையாளர்களுடன் ஏற்படுத்தப்படும் ஒப்பந்தத்துக்கு அமைவாக அரிசி வகைகளின் விலைகள் அடுத்த வாரமளவில் குறைக்கப்படும் என அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

அதற்கமைய இதற்கான உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்பவர்களுக்கு ஒரு லட்சம் ரூபா அபராதம் விதிக்கும் வகையிலான சட்ட ஏற்பாடு நாடாளுமன்றத்தில் அடுத்த வாரம் நிறைவேற்றப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.



குறித்த சட்ட ஏற்பாடு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின்னர் அரிசி வகைகளுக்கான விலை நிர்ணயம் செய்யப்படும் என அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

மேலும், நாட்டின் 80 வீதமான மக்கள் பயன்படுத்தும் நாடு அரிசியின் விலையை 100 ரூபாவை விடக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே குறிப்பிட்டுள்ளார்.

## இலஞ்ச ஊழல் வழக்கிலிருந்து நிசங்க மற்றும் பாலித விடுதலை

இலஞ்ச ஊழல் வழக்கில் இருந்து அவன்கார்ட் நிறுவன தலைவர் நிசங்க சேனாதிபதி மற்றும் பாலித பெர்னான்டோ ஆகியோர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குறித்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, வழக்கை தொடர முடியாது என்றும் பிரதிவாதிகள் எழுப்பிய முதற் கட்ட ஆட்சேபனையை நிராகரித்தார் என சுட்டிக்காட்டினார்.

இந்த முடிவை எதிர்த்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்துள்ளதாகவும், ஜுலை 15 ஆம் திகதி மனு மீதான விசாரணை வரும்போது வழக்கு திரும்பப் பெறப்படும் என்றும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அறிவித்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அந்த நிபந்தனைக்கு உட்பட்டு, அவரது தரப்பினர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன் தாக்கல் செய்த திருத்த மனுவை மீளப்பெற்றதாக சட்டத்தரணி அஜித் பதிரன தெரிவித்தார்.

## உடுப்பிட்டியில் வாள்வெட்டு இருவருக்கு விளக்கமறியல்

### நால்வரைத் தேடி பொலிஸ் வலைவீச்சு

யாழ்ப்பாணம் - உடுப்பிட்டி, நாவலடியில் அண்மையில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள், நீதிமன்ற உத்தரவின்பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய 4 சந்தேகநபர்கள் தலைமறைவாகியுள்ள நிலையில், அவர்களை தேடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 20ஆம் திகதி, உடுப்பிட்டி - நாவலடியில் வீதியில் கதைத்துக் கொண்டிருந்த இளைஞர்கள் மீது அப்பகுதிக்கு திடீரென மோட்டார் சைக்கிள்களில் வாள்களுடன் வந்த குழுவொன்று தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்றது.

அதனைத் தொடர்ந்து சம்பவம் தொடர்பில் தொடர்ச்சியாக விசாரணை முன்னெடுத்து வந்த பொலிஸார், குறித்த குழுவைச் சேர்ந்த ஒருவரை கடந்த வாரம் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய போது, சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவு பிறப்பித்தார்.

இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை 24 வயதுடைய சந்தேகநபர் ஒருவரை கைது செய்த பொலிஸார் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர்.

இதன்போது குறித்த சந்தேகநபரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

மேலும் இரண்டாவது சந்தேகநபரிடம் வாள் ஒன்றும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில் மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய 4 சந்தேகநபர்களை தேடும் நடவடிக்கையை, வல்வெட்டித்துறை பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 24 மணி நேரத்தில் 68 பேருக்கு மட்டக்களப்பில் கொவிட் தொற்று

### வைத்தியர் நாகலிங்கம் மயூரன் தகவல்

மட்டக்களப்பில் நேற்று காலையுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் 68 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்துள்ளார்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்தியர் நாகலிங்கம் மயூரன் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

கடந்த 24 மணி நேரத்தில் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் 22 பேரும் செங்கலடி சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் 11 பேரும் வெல்லாவெளி சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் 10 பேருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய மட்டக்களப்பில் இதுவரை 8 ஆயிரத்து 275 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், 116 பேர் உயிரிழந்துள்ளமையுடன் 755 பேர் தொடர்ந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை கடந்த திங்கள் மாத்திரம் 32 ஆயிரத்து 221 பேருக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன. இதற்கமைய இதுவரை ஒரு லட்சத்து 42ஆயிரத்து 754 கொவிட் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன. - என அவர் குறிப்பிட்டுள்ளார்.



## வீடுகளில் பணிக்கமர்த்தப்படும் சிறுவர்கள்; கண்டறிய பொலிஸார் தீவிர வேலைத்திட்டம்

வீடுகளில் பணிக்காக அமர்த்தப்பட்டுள்ள சிறுவர்களை கண்டறிவதற்கான விசேட வேலைத்திட்டம் ஒன்று நேற்று (செவ்வாய்க்கிழமை) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, மேல் மாகாணத்தில் உள்ள வீடுகளில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளரும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கொழும்பு தெற்கு பிரிவு சிறுவர் மற்றும் மகளிர் பிரிவினரும் இணைந்து இந்த சோதனைகளை முன்னெடுக்கவுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், வீடுகளில் பணிக்காக அமர்த்தப்பட்டுள்ளவர்களின் வயதெல்லையின் அடிப்படையில் குறித்த வீட்டு உரிமையாளர்கள் மற்றும் குழுக்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வீடுகளில் பணியாற்றுவதற்காக குழந்தைகளை கொழும்புக்கு அழைத்து வந்து, பின்னர் முதலாளிகள் என்று அழைக்கப்படுபவர்களால் கொடுமை மற்றும் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்பட்ட சம்பவங்கள் அண்மைய நாட்களில் அதிகமாகப் பதிவாகியுள்ளன எனவும் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பரவும் புதிய ரக வைரஸ்கள்

கொரோனா நோய்த் தொற்றை ஏற்படுத்தும் கொவிட் – 19 வைரஸ் ரகம் பரவுவதை விட வேகமாக அது பற்றிய செய்திகள், வதந்திகள் பரவுகின்றன.

முதலில் சாதாரண கொவிட் வைரஸ் பரவியது. அதற்கான தடுப்பூசிகளை கண்டு பிடிக்கப்பட்டமையை அடுத்து அந்தத் தடுப்பூசிகள் மூலம் நமக்குக் காப்பரண் அமைத்துக் கொள்ளலாம், மனித குலம் தப்பிப் பிழைக்கும் எனப் பெருமூச்சு விட்டோம்.

ஆனால் கொரோனா வைரஸ் மனித குலத்துக்குக் கண்ணாமூச்சி விளையாட்டுக் காட்டத் தொடங்கி விட்டது.

அது இடத்துக்கு இடம், பிரதேசத்துக்குப் பிரதேசம் தன் கட்டமைப்பை மாற்றிக் கொண்டு புதிய, புதிய வடிவங்களில், திரிவுகளில் வெளிப்படத் தொடங்கியது.

இந்தப் புதிய திரிவுகள், முன்னையவற்றை விட பரவுவதிலும், தாக்கத்திலும், நாச விளைவுகளை ஏற்படுத்துவதிலும் வீரியமும், வேகமும் கொண்டவையாக அமைந்தன.

அது மட்டுமல்ல, ஏற்கனவே மருத்துவ ரீதியில் கண்டுபிடிக்கப்பட்ட தடுப்பூசிகளுக்கு 'டிமிக்கி' கொடுத்து மனிதரில் தாக்கத்தை விளைவிக்கக் கூடியனவாக புதிய உரு எடுத்து வருகின்றன அவை.

ஆகவே புதிது புதிதாக உருவெடுக்கும் – திரிவடைந்து மாறுபாடடைந்து வரும் – கொரோனா வைரஸ் வகைகளுக்கு ஏற்ப தடுப்பூசிகளையும் மாற்ற வேண்டிய இக்கட்டு.

எத்தனை தடவைகள் மாறி மாறி தடுப்பூசிகளை வழங்கினாலும், ஒவ்வொரு முறையும் அதன் பின்னர் புதிய ஒரு திரிவு மாற்றத்துடன் இதே வைரஸ் ரகம் வருமானால் அதனை எதிர்கொள்வது எங்ஙனம் என்று தெரியாமல், விஞ்ஞானிகளும் மருத்துவ ஆய்வாளர்களும் தடுமாறுகின்றார்கள்.

திரிவடைந்து புதிய உருக்கொள்ளும் வைரஸ்களுக்கு ஒவ்வொரு ரகப் பெயர் சூட்டுகின்றார்கள்.

திரிவடைந்த நிலையில் முதலில் பிரிட்டனில் அடையாளம் காணப்பட்ட பி.1.1.7 என்ற ரக கொரோனா வைரஸ் 'அல்பா' திரிவு என்று பெயர் சூட்டப்பட்டது.

இந்தியாவில் அடையாளம் காணப்பட்ட பி.1.617.2 என்ற ரக வைரஸ் 'டெல்டா' திரிவு என அழைக்கப்பட்டது.

இவை இரண்டும் வீரியம் கூடியவை. மனித குலத்துக்கு அதிக பாதிப்பையும் இழப்பையும் ஏற்படுத்த வல்லவை.

அது மட்டுமல்ல, நாம் தற்போது பயன்படுத்தும் கொரோனாத் தடுப்பூசி ரகங்களை மீறி எமது உடலில் தாக்கத்தை ஏற்படுத்த வல்லவை.

மேற்படி இரண்டு புதிய ரக வைரஸ்களையும் எதிர்கொள்வதற்கு ஏற்ற தடுப்பூசி ரகம் இனித்தான் உருவாக்கப்பட வேண்டியிருக்கும்.

கொரோனா வைரஸ் ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு ரகத்தில் – ஒவ்வொரு விதத்தில் – திரிவடைந்து தன்னை மேம்பட்ட அழிவு சக்தியாக உருவாக்கும் போது, ஒவ்வொரு தடவையும் – அதற்கோற்றால்போல புதுப் புது கொரோனாத் ரகத் தடுப்பூசிகளை ஆராய்ந்து, ஆராய்ச்சி செய்து, கண்டுபிடித்து, தயாரித்து, உலக மக்களுக்கு எல்லாம் அதனை ஒவ்வொரு தடவையும் வழங்குவது என்பது சாத்தியப்படக் கூடிய விடயமே அல்ல.

ஆகவே அடிக்கடி, மாறி, திரிவடைந்து தன்னை மாற்றிக் கொண்டு புதிய, புதிய உருவெடுத்து வரும் கொரோனா வைரஸை எதிர்கொள்வதற்கு புதிய வழிவகை ஒன்றை – திட்டம் ஒன்றை – உலக சமூகம் கண்டு பிடித்து நடைமுறைப்படுத்த வேண்டிய கட்டாயம் உள்ளது.

இதற்கிடையில் பெரு நாட்டில் திரிவடைந்து உருவாகி, அடையாளம் காணப்பட்ட 'ஸி.37.லம்டா' என்ற மிக மோசமான ரக கொரோனா வைரஸ் நாட்டுக்குள் நுழைந்து விட்டதாகவும், அது ஏற்கனவே புகுந்த பிரிட்டிஷ் திரிவு அல்பா ரக வைரஸ் மற்றும் இந்தியத் திரிவு டெல்டா ரக வைரஸ் ஆகியவற்றினின்றும் வேறுபட்டது என்றும், அதிக ஆபத்தை விளைவிக்கப் போகின்றது என் றும் செய்திகள் பரவி வருகின்றன.

ஆனால், அத்தகைய 'லம்டா' ரக கொரோனா வைரஸ் நாட்டுக்குள் நுழைந்து அடையாளம் காணப்பட்டமைக்கான ஆதாரம் ஏதுமில்லை. கொழும்பு ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோய் எதிர்ப்பியல் மற்றும் கல உயிரியல் பிரிவு இயக்குநர் சந்திம ஜீவந்திர இதனைக் கூறுகின்றார்.

எனினும், வெளிநாட்டுப் பயணிகளின் வருகைக்கு இடமளிக்கப்பட்டிருக்கும் நிலையில் இனிப் புதிதாக அத்தகைய ரக வைரஸ் இங்கு தொற்றிப் பரவுவதற்கான ஏது நிலை உண்டு டென்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்கின்றார் அவர்.

எனினும், இந்தியாவில் பரவிய டெல்டா ரக வைரஸ்கள் கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மேற்கு மாகாண மாவட்டங்களிலும், மத்திய மாகாணத்தின் மாத்தளை மாவட்டத்திலும், வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களிலும் பரவியிருக்கின்றமையும் அபாயச் சங்கு ஒலிக்கும் விவகாரம்தான்.

## கடலட்டைப் பண்ணைகள் அமைக்கும் பணிகள் கௌதாரிமுனையில் ஆரம்பம்

பூநகரி, கௌதாரிமுனையில் கடலட்டைப் பண்ணைகளை அமைக்கும் பணிகள் பிரதேச கடற்றொழிலாளர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலுக்கு அமைய நக்டா நிறுவனத்தால் அடையாளப்படுத்தப்பட்ட 16 இடங்களில் பண்ணைகளை அமைக்கும் பணிகள் முதற்கட்டமாகக் கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டன.

இதற்கான பயனாளர்கள், கௌதாரிமுனை கடற்றொழிலாளர் சங்கத்தால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், அடையாளப்படுத்தப்பட்ட இடங்களில் பண்ணைகளை அமைப்பதற்குத் தேவையான வலைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் ஒரு தொகுதி வலைகள் வழங்கி வைக்கப்பட்டன.

பொருத்தமான இடங்கள் தெரிவு செய்யப்பட்டு கடலட்டைப் பண்ணைகளை அமைக்கும் செயற்பாடுகள், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் திட்டமிடலில் வடக்கு மாகாணத்தில் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், கௌதாரிமுனை பிரதேசத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களும் நிரந்தர வாழ்வாதாரத்தை வழங்கக் கூடிய கடலட்டைப் பண்ணைகளை அமைப்பதில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

அதனால், இதுவரை சுமார் 30 இற்கும் மேற்பட்டவர்கள் கடலட்டைப் பண்ணைகளுக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளனர்.

இந்நிலையில் இதுவரை பொருத்தமான 16 இடங்களை நக்டா எனப்படும் தேசிய நீரியல் வள அபிவிருத்தி அதிகார சபை அடையாளப்படுத்தியுள்ள நிலையில், அவற்றில் பண்ணைகளை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## எக்ஸ் பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து; 307 கடல் வாழ் உயிரினங்கள் சாவு

கொழும்பு கடற்பரப்பில் தீப்பற்றி எரிந்த எக்ஸ் பிரஸ் பேர்ள் கப்பல் சம்பந்தப்பட்ட கடல் பேரழிவைத் தொடர்ந்து இதுவரை மொத்தம் 307 கடல் வாழ் உயிரினங்கள் இறந்துள்ளன.

அதன்படி 258 ஆமைகள், 43 டொல்பின்கள் மற்றும் ஆறு திமிங்கலங்கள் இறந்து விட்டன என வனவிலங்கு மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

அரசாங்க ஆய்வாளர் திணைக்களம் இந்த விவகாரம் தொடர்பாக அறிக்கையை நேரடியாக சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு ஒப்படைக்கவுள்ளது.

இதன் காரணமாக கடல் வாழ் உயிரினங்களில் நெக்ரோஸ்கோபிகளின் இருக்கின்றனவா என்பதை உறுதிப்படுத்துவதில் உள்ளூர் அதிகாரிகள் தாமதங்களை ஏற்படுத்துகின்றனரா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

தீக்காயங்கள், இரசாயனங்கள் வெளிப்படுவதால் ஏற்படும் மூச்சுத்திணறல் ஆகியவை காரணமாக கடல் வாழ் உயிரினங்கள் உயிரிழந்தன என ஜூன் 17 அன்று நியமிக்கப்பட்ட நிபுணர் குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை கடல் விலங்குகள் இறப்பதற்கு வேறு காரணங்களும் இருக்கலாம் என்பதால் இது தொடர்பான விசாரணைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என சுற்றுச் சூழல் அமைச்சின் செயலாளர் வைத்தியர் அனில் ஜசிங்கவும் தெரிவித்திருந்தார்.

மே 24 அன்று விபத்துக்குள்ளான கப்பலில் சுமார் 25 தொன் நைட்ரிக் அமிலம், 300 மெட்ரிக் டொன் எரிநெய், 78 மெட்ரிக் தொன் கரிமப் பொருள்கள் அல்லது உயிர்வளத்திலிருந்து தயாரிக்கப்படும் உயிரி எரிபொருள்கள் கொண்டு செல்லப்பட்டன எனக் கூறப்படுகிறது.

இதில் உயிர்வளத்திலிருந்து தயாரிக்கப்படும் உயிரி எரிபொருள்கள் நாட்டின் கடல் சூழலை, பல ஆண்டுகளாகப் பாதிக்கக்கூடும் என சுற்றுச்சூழல் நிபுணர்கள் கணித்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

## புதிய வாக்காளர் பதிவு காலக்கெடு ஜூலை 30!

### தவறவிடவேண்டாம் எனத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் வேண்டுகோள்

இலங்கைத் தேர்தல்கள் ஆணையம் புதிய வாக்காளர்களாகத் தகுதி பெற்றுள்ளவர்கள் தங்கள் பெயர்களைத் தேருநர் இடாப்பில் சேர்த்துக் கொள்வதற்கான பதிவுகளை ஜூலை 30ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ள வேண்டும் என அறிவித்துள்ளது. மேலும், கொரோனாப் பேரிடர் காரணமாக அலுவலர்கள் வீடுவீடாகச் சென்று படிவங்களை விநியோகித்து வாக்காளர்களைப் பதிவு செய்யும் வழமையான நடைமுறை இந்த ஆண்டு நடைபெறாது என்றும் தகுதிபெற்ற வாக்காளர்கள் தாமாகவே கிராம சேவையாளரிடம் சென்று படிவங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து கையளிக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

எனவே, பதிவு செய்வதற்கு இன்னும் இரண்டொரு தினங்களே இருக்கும் நிலையில் புதிய வாக்காளர்கள் இந்தக் காலக்கெடுவைத் தவற விட்டுவிடவேண்டாம் எனத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுதொடர்பாகத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் பொதுச் செயலாளர் மகேசன் கஜேந்திரன் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்திருக்கும் அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

வாக்குரிமை இலங்கைக் குடிமகனாகவுள்ள ஒவ்வொருவரினதும் அடிப்படை உரிமையாகும். இலங்கையில் வாக்காளர் தினம் கொண்டாடப்பட்டுவரும் ஜூன் முதலாம் திகதியன்று 18 வயது பூர்த்தியடைந்த இலங்கைக் குடிமகனாகவுள்ள எவரும் வாக்களிக்கும் உரிமை பெற்றவர்களாகக் கருதப்படுவார்கள். தேருநர் இடாப்பில் பெயர்களைப் பதிவு செய்வதன் மூலம் மாத்திரமே இந்த வாக்குரிமை உறுதி செய்யப்படும்.

ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும். வாக்காளர்களின் எண்ணிக்கை குறைவடையும் போது தேர்வாகும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையும் குறைவடையும். உதாரணமாக, 1989 ஆம் ஆண்டு யாழ், கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் 11 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்ட நிலையில் வாக்காளர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்ததன் காரணமாகத் தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 7 ஆகக் குறைவடைந்துள்ளது. 2020 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி யாழ்.மாவட்டத்துக்கு 6 நாடாளுமன்ற ஆசனங்களே ஒதுக்கப்பட்டுள்ளன.

வாக்காளர்களின் எண்ணிக்கை குறைந்து செல்லுதல் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆசனங்களில் மாத்திரம் குறைவை ஏற்படுத் தும் ஒன்றல்ல. மாவட்டத்தின் அபிவிருத்திக்கு ஒதுக்கப்படும் நிதி, மாவட்டத்திலிருந்து பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகும் மாணவர்களின் எண்ணிக்கை போன்றவற்றிலும் குறைவை ஏற்படுத்தும் ஒன்றாகும்.

அந்தவகையில், வாக்களிக்கத் தகுதி பெற்ற அனைவரும் தங்களை வாக்காளராகப் பதிவு செய்தல் ஒரு தேசிய கடமையாகும்.

எனவே, ஜூலை 30 ஆம் திகதிக்கு முன்பாக புதிய வாக்காளர்கள் அனைவரும் தமது பகுதிக் கிராமசேவையாளரிடம் சென்று தவறாது பதிவுகளை மேற்கொள்ளுதல் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

ந.வித்தியாதரன்

அங்கம் 27



முன்னாள் தமிழக அமைச்சர் மன்னை நாராயணசாமியுடன எஸ்.டி.எஸ்.

ஆசிரியர் சிவநாயகத்தின் கட்டுரைத் தொடர் 'சிந்தாமணி'யில் பிரசுரமாகும் போது அதன் விநியோக எண்ணிக்கை பல்லாயிரக்கணக்கில் எகிறும். அவரது எழுத்துக்கு என்று ஒரு வாசகர் வட்டம் எப்போதும் இருந்தது. அந்த நேரத்தில் தமிழ் பத்திரிகை உலகில் அதிகம் விற்பனையாகும் வார இறுதிப் பத்திரிகையாக சிந்தாமணியே விளங்கியது.

அச்சமயத்தில் ஆசிரியர் தொடர் கட்டுரை ஒன்றை எழுதினால் அதன் முதல் வாசகனாய் இருப்பது பெரும்பாலும் நான்தான். அது எப்படி என்று நீங்கள் கேட்கலாம்.

தினபதியில் நான் சேர்ந்த போது எனக்கு வயது 19, 20 தான். மும்மொழி பத்திரிகை நிறுவனமான அந்தக் குழுமத்தில் ஆக வயது குறைந்தவன் நான்தான். ஆங்கிலமும் தெரியாமல் சிங்களமும் புரியாமல் மற்றவர்களுடன் ஊடாட நான் படும் அவஸ்தை அங்கு ஏனையோருக்கு ரசிக்கப்படும் விடயம்.

பத்திரிகை அலுவலகத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் புகுந்து விளையாடுவேன் - விடயங்களை அறியும் ஆவலில். குறிப்பாக நூலகம். லைனோ மெஷின் இயக்கப்படும் பகுதி, பத்திரிகை அச்சிடும் பகுதி போன்றவற்றுக்குள் புகுந்து வருவேன். பொதுவாக அங்கெல்லாம் எல்லோரும் செல்ல முடியாது. பல இடங்களுக்கும் அனுமதி பெற வேண்டும். ஆனால் விளையாட்டுப் பிள்ளையாக, நான் விடயங்களைப் பார்த்து அறியும் ஆவலில் வருகிறேன் என்ற எண்ணத்தில் பலரும் என்னை அனுமதித்துப் பார்த்து இருந்தார்கள்.

எழுத்துக்களை அச்சு கோர்க்கும் லைனோ மெஷினில் பணியாற்றுபவர்கள் உருகும் ஈயத்துடன் வேலை செய்பவர்கள். அந்தச் சூட்டில் எப்போதும் அவர்களும் சூடாகவே இருப்பர். அதுவும் ஆசிரிய பீடத்திலிருந்து வரும் எழுத்துக்கள் விளங்காத பிரதிகளை வைத்துக் கொண்டு வாசிக்க முடியாமல் திணறும் போது அவர்கள் வாயிலிருந்து 'செந்தமிழும்' தாராளமாக புரளும். குழுவாக இருந்து கொண்டு அவர்கள் பண்ணும் கெடுபிடித்தனத்துக்கு அஞ்சி ஆசிரிய பீடத்தினர் பெரும்பாலும் கீழே லைனோ மெஷின் பக்கம் வருவதைத் தவிர்த்துக் கொள்வர். என் நிலைமை அப்படி அல்ல. என்னை ஆசிரியர் பீடத்தின் 'சின்னப் பொடியனாக' கருதி அன்புடன் பழகுவர்.

ஆசிரியர் தனது அறையிலிருந்து தமது தொடர் கட்டுரையை எழுதத் தொடங்கினால் எழுதும் காகிதங்களை லைனோ மெஷின் பகுதிக்கு அவ்வப்போது கொண்டுசென்று ஒப்படைப்பது என் வேலை. இதற்கெல்லாம் அங்கு பியோன்கள் இருக்கின்றார்கள். மணி அடித்தால் வந்து எடுத்துச் செல்வர். ஆனால் ஆசிரியர் ஏதேனும் முக்கியமாக எழுதும் சமயங்களில் நானே தேடிப் போய் இந்த வேலையை இழுத்துப் போட்டுச் செய்வேன்.

மை விட்டு எழுதும் பவுண்டன் பேனாவால், வெள்ளை நியூஸ் பிரிண்ட் காகிதத்தில், வரிக் கோடு போடாத வெற்றுத்தாளில், எந்தப் பக்கமும் சாயாமல், அடித்தல் திருத்தல் இன்றி, அச்சடித்தது போல, ஒரு நேர்கோட்டில் அவர் எழுதும் வேகமும், தடையற்ற எழுத்தோட்டமும் ஒரு தனி அழகு. எழுதும் விடயம் தொடர்பில் சிந்தனைத் தெளிவும் கருத்து உறுதியும் மனதில் இருப்பதால் எழுத்து ஓட்டமும் தடையின்றி ஆற்றொழுக்காக இருக்கும். எழுதத் தொடங்கினால் இடையில் 'பிரேக்', யோசனை என்று எதுவும் இருக்காது. எழுத வந்த விடயத்தை எழுதி முடித்த பின்னர் தான் நிறுத்துவார்.

என்ன எழுதுவது, எப்படித் தொடங்கி, எப்படி முடிப்பது என்பவற்றை எல்லாம் தீர்மானித்த பின்னர்தான் எழுதத் தொடங்குவார் என்று நினைக்கிறேன்.

அவர் எழுதுவது ஒரு தனி அழகு. எழுத்து அழகாக இருக்கும். ஆங்கிலத்தில் தொடுத்து எழுதுவது போல தமிழிலும் எழுத்துகளைத் தொடுத்து எழுதியமை போன்ற ஒரு வடிவத்தில் அது காணப்படும். வாசிக்கும் போது எந்த மயக்கமும் தெளிவின்மையும் வரவே வராது. '


அந்த எழுத்துவடிவ ஓட்டம் என் கண்களில் இன்னும் நிற்கின்றது.

அவர் எழுதும் தாள்களை அவரது அறையிலிருந்து லைனோ இயந்திரங்கள் வரை எடுத்துச் செல்வதற்கு இடையில் ஒரு ரவுண்ட் நான் வாசித்து விடுவேன். நான் ஒரு பார்வை பார்த்த பின்னர்தான் பெரும்பாலும் அதைத் தட்டச்சு செய்வது வழக்கம்.

வழமையாக செய்தியாளர் பிரிவில் என் மேசையில் இருந்து எழுந்து போய் அடிக்கடி இந்த வேலையை நானே செய்வேன். பியோன் வேலையை நானே இழுத்துப்போட்டு செய்த அந்தக் காலம் பழைய குரு - சிஷ்ய பரம்பரையி நவீன வடிவம் என்று பிற்காலத்தில் நான் எண்ணிப் பார்ப்பது உண்டு. ஆனால் எந்த சமயத்திலும் ஆசிரியர் இதனை செய்யும்படி கூறவும் இல்லை, எதிர்பார்க்கவும் இல்லை. நானாக இழுத்துப் போட்டு செய்த இந்த வேலையை அவர் தடுக்கவும் முயலவில்லை. அதை அனுமதித்து பார்த்திருந்தார்.

ஒருநாள் இதையொட்டிய ஒரு கேள்வி கேட்டார். அப்போதுதான் அவரது அவதானிப்பின் ஆழத்தை நான் உணர்ந்தேன்.

ஆசிரியர் 'மாமதுரைச் சீமையிலே தேமதுரத் தமிழோசை' கட்டுரைத் தொடர் அன்று எழுதிக் கொண்டிருந்தார். அன்றைய தினம் அவர் எழுதத் தொடங்கியபோது முதல் 2 தாள்களை எடுத்துச் சென்ற நான் அவற்றை லைனோ இயந்திரப் பகுதியில் ஒப்படைத்த பின்னர் எனது மேசைக்குப் போகவில்லை. ஆசிரியரின் கண்ணாடி அறையிலிருந்து சற்று தொலைவில், தினசரி பத்திரிகைகள் ஒழுங்காக அடுக்கி இருக்கும் பகுதியில் நின்றேன். உயர்ந்த மேசைகளில் அன்றைய - அந்த வாரப் பத்திரிகைகள் அடுக்கி இருக்கும். விரும்பும் ஆசிரியர் பீட பணியாளர்கள் நின்றபடி அந்த பத்திரிகை கோவைகளைப் பார்வையிட்டு வாசிக்க முடியும். அன்றன்று பத்திரிகைகளை அவரவர் தத்தமது மேசைக்கு எடுத்துச்சென்று வைத்துக் கொண்டால் மற்றவர்கள் பார்க்க முடியாது என்ற காரணத்தினால் பொதுவாக ஓர் இடத்தில் இப்படி பத்திரிகைகள் அடுக்கப்பட்டிருந்தன. ஆங்கிலப் பத்திரிகைகள் அடுக்கப்பட்டிருந்த மேசையில் நின்றால் ஆசிரியரின் அறை, அவர் எழுதிக் கொண்டிருப்பது தெரியும். நான் அந்தப் பத்திரிகை அடுக்குகளுக்கு முன்னால் நின்றபடி அவர் எழுதுவதை நீண்டநேரம் அவதானித்துக் கொண்டிருந்தேன். ஆசிரியரும் அதை கவனித்திருப்பார் போல. ஆனால் அவர் எதுவும் கேட்கவில்லை.



தமிழக முஸ்லிம் லீக் தலைவர் அப்துல் சமத்துடன் எஸ்.டி.எஸ்.

அன்று அவரது எழுத்து வேலை முடிந்த பின்னர் மாலையில் அவர் ஆறுதலாக இருந்தபோது அவரது அறையைத் தாண்டிச் சென்ற என்னை அழைத்தார். ஒரு கேள்வி கேட்டார்.

*"நண்பகலில் நான் கட்டுரைத் தொடர் எழுதிக் கொண்டிருந்தபோது சற்று தொலைவில் பத்திரிகைகள் அடுக்கப்பட்டிருந்த மேசையில் நின்றவாறு என்னை நீண்ட நேரம் நோட்டமிட்டீர், எதற்காக?"* - என்றார் ஆசிரியர். நான் மலைத்துப் போனேன்.

என்னிடம் ஒரு காரணம் இருந்தது. அதை அவர் அவதானித்திருப்பார் என்றுதான் நான் நினைக்கிறேன்.

*"நீங்கள் அந்தத் தமிழாராய்ச்சி மாநாட்டில் நடைபெற்ற பிரம்மாண்டமான பவனியில் வரிசையாக சென்ற நூற்றுக்கும் மேற்பட்ட ஊர்திகளை வரிசையாக எழுதி இருந்தீர்கள். பந்தி பந்தியாக ஊர்திகளின் பெயர்கள். ஆனால் அவற்றை நீங்கள் எழுதியபோது கைகளில் எந்தக் குறிப்பும் இருக்கவில்லை. மேசையில் எந்த ஆவணமும் காணப்படவில்லை. எதையும் பார்க்காமல், எந்தக் குறிப்பும் இல்லாமல், இடையில் நின்று, நிதானித்து, யோசிக்கக் கூட இல்லாமல் எப்படி இவ்வளவு ஊர்திகளின் பெயர்களை விறுவிறுவென்று எழுதினீர்கள்? அதுதான் ஆச்சரியமாக இருந்தது. நின்று முழுமையாக அவதானித்தேன்."* - என்றேன்.

ஆசிரியர் என் கேள்விக்கு நேரடியாக பதில் தரவில்லை மாறாக சிரித்தார். அதன் பின்னர் அவர் கூறியவை முக்கிய விடயம்.

*"ஒரு பத்திரிகையாளன் என்றால் அவதானிக்க வேண்டிய விடயங்களை அவதானித்து, கிரகித்துக் கொள்வதும் மனதில் பதிவு செய்து கொள்வதும் மிக அவசியம். அதை வளர்த்துக் கொள்ளுங்கள்"* - என்றார் ஆசிரியர்.

எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அமிர்தலிங்கத்தைப் பேட்டி கண்ட நான், அதுபற்றி ஆசிரியர் கேட்டபோது, பதில் கூறுவதற்கு என்னுடைய குறிப்புப் புத்தகத்தை எடுத்துவர ஓடிச் சென்றமையையும், ஆசிரியர் அதை குறை கூறியமையையும் பின்னாள்களில் நான் நினைத்துப் பொருத்திப் பார்த்தேன்.

உண்மையில் ஆசிரியர் சிவநாயகம் போல விடயங்களைக் கிரகித்து, மனதில் இருத்தி, உள்ளதை உள்ளபடியே எழுதக் கூடிய ஆற்றல் இன்று எத்தனை பத்திரிகையாளர்களுக்கு உள்ளது என்று நினைத்துப் பார்க்கிறேன்.

என்றாலும், பின்னாள்களில் அந்த ஆற்றலை நான் ஓரளவு வளர்த்துக் கொண்டேன். வயது போகப் போக அந்த ஆற்றல் பல பத்திரிகையாளர்களில் தேய்ந்து வருவதையும் அவதானித்துள்ளேன். எங்கள் நிலையும் என்னாகுமோ ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்…! இந்தப் பயத்தால், இன்று வரை நினைவில் நிற்கும் - என்றோ ஒரு நாள் நான் எழுதியாக வேண்டியவை என கருதி நிலுவையில் வைத்திருக்கும் - பல விடயங்களுக்கு இயன்ற விரைவில் எழுத்துருக் கொடுத்தாக வேண்டும் என்பது எனக்குப் புரிகிறது.

இந்தச் சமயத்தில் இப்போது என்னுடைய வாழ்வில் இடம்பெற்ற ஒரு ருசிகரமான உரையாடலை குறிப்பிட்டு நினைவூட்டுவது பொருத்தமானது என நினைக்கிறேன். ஒரு பத்திரிகையாளனை அவன் மனைவி எப்படி எடைபோட்டு இருக்கின்றாள் என்பதற்கு இது நல்ல உதாரணம்.

அண்மையில் கொழும்பில் வீட்டிலிருந்து வெளியே புறப்பட்டேன். காலி வீதிக்குப் போவதால் வரும்போது பால், வாழைப்பழம், தோசை மாவு என்பன போல சில பொருள்களை வாங்கிவருமாறு மனைவி என்னிடம் கூறியிருந்தார். நான் தலையாட்டிவிட்டுப் புறப்பட்டேன். வேலை முடிந்து திரும்பும்போது சுப்பர் மார்க்கெட்டுக்குள் நுழைந்தேன். அப்போதுதான் மனைவி கூறிவிட்ட நான்கைந்து பொருள்களில் ஒன்றிரண்டு நினைவில் இல்லை என்பது எனக்கு தெரிந்தது. மனைவிக்கு தொலைபேசி அழைப்பு எடுத்தேன். இரண்டு பொருள்களைச் சொல்லி மற்றவை என்ன என்று கேட்டேன். மனைவிக்கு சற்று எரிச்சல் வந்திருக்கும் போல. அவர் கேட்டார் ஒரு கேள்வி, என் வாழ்க்கையில் மறக்க முடியாத கேள்வி அது.

*"சம்பந்தன் ஐயா ஒரு மணித்தியாலம் கூட்டத்தில் பேசினால் ஒரு குறிப்பும் இல்லாமல் ஒரு வரி விடாமல் அப்படியே எழுதுவதற்கு உங்களுக்கு நினைவில் நிற்கும். நாங்கள் நான்கைந்து பொருள்களைச் சொல்லி விட்டால்தான் அவை மறந்து விடுகின்றன"* என்றார் உரிமை கலந்த நையாண்டித்தனமாக என் மனைவி.

அது, நியாயமான கேள்வி. என்னிடம் பதில் இல்லை. ஆனாலும் இதுதான் பத்திரிகையாளனின் நிலைமை.

எஸ்.டி.எஸ். ஐயாவும் கூட அப்படித்தான் அனுபவப்பட்டு வந்திருப்பார் என்று நினைக்கிறேன்.

(வளரும்…)

காலைக்கதிர் Kalaikkathir

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021


தரம் - 08 | கணிதம் | அலகு 20

## பரப்பளவு

ஒரு எல்லையினால் அடைக்கப்பட்டுள்ள மேற்பரப்பொன்றின் அளவு பரப்பளவு எனப்படும்.


**செவ்வகத்தின் பரப்பளவு**

செவ்வகத்தின் பரப்பளவு = நீளம் x அகலம்






**சதுரத்தின் பரப்பளவு**

சதுரத்தின் பரப்பளவு = (பக்கநீளம்)$^2$



**செங்கோண முக்கோணியின் பரப்பளவு**








செங்கோண முக்கோணியின் பரப்பளவு = $\frac{1}{2}$ x (செவ்வகத்தின் பரப்பளவு)

செங்கோண முக்கோணியின் பரப்பளவு = $\frac{1}{2}$ x நீளம் x அகலம்

= $\frac{1}{2}$ x அடி x செங்குத்து உயரம்

உதாரணம்






பரப்பளவு = $\frac{1}{2}$ x 12cm x 8cm

= 48cm$^2$


**பயிற்சி**


01. முக்கோணி ABC இன் பரப்பு யாது?





02. முக்கோணி PQR இன் பரப்பு யாது?




03. முக்கோணி XYZ இன் பரப்பு யாது?


04. முக்கோணி QRS இன் பரப்பு யாது?




05.
i) முக்கோணி ABC இன் பரப்பு யாது?

**கூட்டுத் தளவுருக்களின் பரப்பளவு**

உதாரணம்





செவ்வகத்தின் பரப்பு = 12cm x 9cm
= 108cm$^2$

முக்கோணியின் பரப்பளவு = $\frac{1}{2}$ x 8cm x 9cm
= 36cm$^2$

கூட்டுருவின் பரப்பளவு = 108cm$^2$ + 36cm$^2$
= 144cm$^2$


**நிறந்தீட்டப்பட்ட பகுதியின் பரப்பளவைக் காண்க.**

01.





..........................................

02.





..........................................

03.




..........................................


04.




..........................................

**திண்ம உருக்களின் மேற்பரப்பளவு**

**கனவுருவின் மேற்பரப்பளவு**





கனவுருவின் மேற்பரப்பளவு

= 2 (நீளம் x அகலம்) + 2(அகலம் x உயரம்) +2(உயரம் x நீளம்)

= 2(நீளம் x அகலம் + அகலம் x உயரம் + உயரம் x நீளம்)

உதாரணம்




கனவுருவின் மேற்பரப்பு

= 2(15cm x 8cm + 8cm x 6cm + 6cm x 15cm)


= 2(120cm$^2$ + 48cm$^2$ + 90cm$^2$)

= 2 x 258cm$^2$

= 516cm$^2$


பின்வரும் கனவுருக்களின் மொத்த மேற்பரப்பளவுகளைக் காண்க

01.





..........................................

02.





..........................................

03.




..........................................


**சதுரமுகியின் மேற்பரப்பளவு**




சதுரமுகியின் மேற்பரப்பளவு
= 6 X (பக்கநீளம்)$^2$


**பின்வரும் சதுரமுகிகளின் மொத்த மேற்பரப்பளவுகளைக் காண்க**

01.





..........................................
..........................................
..........................................

02




..........................................
..........................................
..........................................

03.




..........................................
..........................................
..........................................

(07ஆம் பக்கம் பார்க்க)

ஆக்கம் - தாமினா சுபாகரன்
கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியை (யாழ்/ செங்குந்த இந்துக் கல்லூரி)
யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.
வழிகாட்டலும் ஆலோசனையும் - திரு. ஞானமணி இரத்தினசிங்கம்
ஓய்வுநிலை விரிவுரையாளர், யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.

# எரிவாயு விற்பனை தொடர்பில் மோசடி நடந்தால் முறையிடுக!

## வவுனியா பாவனையாளர் அதிகார சபை கோரிக்கை

சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விற்பனை தொடர்பில் மோசடிகள் இடம் பெற்றால் வவுனியா பாவனையாளர் அதிகார சபையினரை தொடர்பு கொள்ளு மாறு அதன் பொறுப்பதிகாரி நிலாந்தன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளவை வருமாறு -

சமையல் எரிவாயுவிலை தொடர் பான மோசடிகளுக்கு இடம்கொடுக்க வேண்டாம். நாடு முழுவதும் வீட்டுப் பாவனைக்கு உபயோகிக்கும் சமையல் எரிவாயு அண்மைக்காலமாக இரு வேறு பட்ட அளவுகளில் சந்தையில் விற்பனை செய்யப்படுவது நுகர்வோர் மத்தியில் குழப்ப நிலையை ஏற்படுத்தி உள்ளது.

12.5 கிலோ சமையல் எரிவாயு கொள் கலன் ஒன்றின் விலை வவுனியா மாவட்ட எல்லைக்குள் ரூ.1, 559 ரூபாவாக உள்ளது எனினும் கடந்த சில மாதங்க ளாக 18 லீற்றர் பிறிமியம் என அறிமுகம் செய்யப்பட்ட எரிவாயு கொள்கலனானது ரூ.1, 461 இற்கு விற்பனை செய்யப்பட்டது.

இதன் எடை உண்மையில் 9.18 கிலோ என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் இவ்வாறு புதிதாக அறிமுகம் செய்யப் பட்ட 18 லீற்றர் பிறிமியம் எரிவாயு கொள் கலனின் புதியவிற்பனை விலைதொடர் பான விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியுள்ளது.

அதனடிப்படையில் ஞாயிறு முதல் வவுனியா மாவட்ட எல்லைக்குள் புதிய விலையாக 1, 216 ரூபா நிர்ணயம் செய் யப்பட்டுள்ளது.

அத்துடன் 12.5 கிலோ சமையல் எரிவாயு கொள்கலன், 18 லீற்றர் பிறிமியம் என அறிமுகம் செய்யப்பட்ட எரிவாயு கொள்கலன் ஆகிய இரண்டுமே கொள் கலனின் அளவு ஒன்றாகவே இருக்கும்.

அதேவேளை உள்ளீடு செய்யப்பட்ட (நிரப்பப்பட்ட) எரிவாயுவின் அளவுகளில் உள்ள வேறுபாடே விலை வேறுபடக் காரணமாகும். அத்துடன் விற்பனை நிலையங்களில் எரிவாயு கொள்கலன் களின் நிறை/அளவு மற்றும் அவற்றின் விலை என்பன தெளிவாகக் காட்சிப் படுத்தல் அவசியமாகும்.

இது தொடர்பாக மோசடிகள் இடம் பெற்றால் வவுனியா மாவட்ட பாவனை யாளர் அலுவல்கள் அதிகார சபையில் முறைப்பாடு செய்யுமாறு கேட்கப்படுகி றீர்கள். ஞாயிறு முதல் அமுலாகும் வகையில் இந்த வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும் ஏனைய அளவுகளை கொண்ட எரிவாயு கொள்கலன்களின் விலைகளில் எந்தவொரு மாற்றமும் இல்லை என்று குறித்த அறிக்கையில் உள்ளது.

வவுனியா மாவட்ட எல்லைக்குள் எரிவாயு கொள்கலன்களின் விற்பனை விலை விவரம்.12.5 கிலோ - 1,559.00, 18 லீற்றர் / 9.18 கிலோ - 1,216.00, 37.5 கிலோ - 6,463.00 5 கிலோ - 633.00, 2 கிலோ - 294.00 வெற்று எரிவாயு கொள்கலன் ஒன்றின் விற் பனை விலை 12.5 கிலோ - 5,450.00, 37.5 கிலோ - 8,950.00, 5 கிலோ - 4,250.00, 2 கிலோ - 2,850.00.

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 08 | கணிதம் | அலகு 20


## பரப்பளவு

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி)


தரப்பட்டுள்ள உருவில் முக்கோணி BCD இன் பரப்பளவு $30cm^2$ ஆகும்.

h இன் பெறுமானத்தை காண்க.

ABD இன் பரப்பளவை காண்க.




**நிழற்றிய பகுதியின் பரப்பளவை காண்க.**




**பொழிப்பு**

- முக்கோணியின் பரப்பளவு $= \frac{1}{2} \times$ அடி $\times$ செங்குத்துயரம் ஆகும்.
- பக்கமொன்றின் நீளம் $a$ அலகுகள் ஆகவுள்ள சதுரமுகியின் மேற்பரப்பின் பரப்பளவு $6a^2$ அலகுகள் ஆகும்.
- நீளம், அகலம், உயரம் முறையே $a$, $b$, $h$ ஆகவுள்ள கனவுருவின் மொத்த மேற்பரப்பின் பரப்பளவு $(2ab + 2ah + 2bh)$ சதுர அலகுகள் அல்லது $2(ab + ah + bh)$ சதுர அலகுகள் ஆகும்.

**ஆக்கம் - தாமினா சுபாகரன்**
**கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியை (யாழ்/ செங்குந்த இந்துக் கல்லூரி)**
**யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.**
**வழிகாட்டலும் ஆலோசணையும் - திரு. ஞானமணி இரத்தினசிங்கம்**
**ஓய்வுநிலை விரிவுரையாளர், யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.**

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 08 | விஞ்ஞானம் | அலகு 09

## மனிதனின் உடற்தொகுதி - விடைகள்

**9.2 மனிதனின் நரம்புத் தொகுதி - இயைபாக்கம்**

1. கண், காது, மூக்கு, நாக்கு, தோல்
2. வாங்கி
3. தசைகள், சுரப்பிகள்
4. புலனங்கங்களும் விளைவுக் காட்டிகளும் ஒருங்கிணைந்து செயற்படுதலே

**இயைபாக்கம் எனப்படும்**

5. நரம்புகளும், ஓமோன்களும்
6. நரம்புத் தொகுதியின் மூலம் நடைபெறும் இயைபாக்கம் நரம்பு இயைபாக்கம் எனப்படும்.
7. ஓமோன் மூலம் நடைபெறும் இரசாயன இயைபாக்கம் நரம்பின்றிய இயை பாக்கம் எனப்படும்.

**மையநரம்புத் தொகுதி**

1. மூளை, முண்ணான்
2. 1 - மூளை, 2 - முண்ணான்
3. மூளைய முண்ணான் சருமம்
4. மூளைய முண்ணான் பாய்பொருள்
5. அதிர்வுகளை அகத்துறிஞ்சுதல், போசணையை வழங்குதல், நுண்ணங்கித் தொற்றுகளிலிருந்து மையநரம்புத் தொகுதியைப் பாதுகாத்தல்
6. 1 - மூளையம் 2 - மூளி 3 - நீள்வளைய மையவிழையம் 4 - முண்ணான்
7. 1 - D 2 - A 3 - B 4 - C

**சுற்றயல் நரம்புத் தொகுதி**

1. சுற்றயல் நரம்புத் தொகுதி
2. மண்டையோட்டு நரம்பு
3. முண்ணான் நரம்புகள்
4. மண்டையோட்டு நரம்பு, முண்ணான் நரம்புகள்
5. 1) 12சோடி 2) 31சோடி
6. புலனங்கங்களிலிருந்து மைய நரம்புத் தொகுதிக்குக் கணத்தாக்கங்களை ஊடுகடத்தல், மைய நரம்புத் தொகுதியிலிருந்து விளைவுக் காட்டிகளுக்குக் கணத் தாக்கங்களை ஊடுகடத்தல்
7. நரம்பினூடாகப் பயணிக்கும் மின் சமிக்ஞையாகும்
8. 1 - சிறு வயதிலிருந்து தொடர்ச்சியாக சமனிலையுணவைப் (நிறையுணவை) பெற்றுக்கொள்ளல், 2 - சிறு குழந்தைகளையும் பிள்ளைகளையும் விபத்துக்களிலி ருந்து பாதுகாத்துக் கொள்ளல், 3 - கர்ப்பகாலத்தில் தாய் சரியான போசாக்கினைப் பெற்றுக்கொள்வதன் மூலம் குழந்தையின் உடல் வளர்ச்சி, உளவளர்ச்சி தொடர் பாக கவனத்திற் கொள்ளுதல், 4 - அன்றாட வாழ்க்கைச் செயற்பாடுகளான விளை யாட்டு, உடற்பயிற்சி, பாரம் தூக்குதல் போன்றவற்றின் போது சரியான கொண்ணி லையைப் பேணுதல், 5 - அதிகளவில் விழித்திருப்பதைத் தடுத்தல், 6 - நுண்ண றிவை வளர்க்கும் பயிற்சிகளில் ஈடுபடல், 7 - மன அழுத்தம் போன்ற நிலைமை களைக் கட்டுப்படுத்தல்.

**9.3 மனிதனின் தோல்**

1. தோல்
2. திணிவு 4.5Kg தடிப்பு 1 - 2mm
3. X - மேற்றோல், Y - உட்தோல்
4. A - மயிர், B - நிறுத்தித் தசை, C - நெய்ச்சுரப்பி D - குருதி மயிர்த்துளைக் குழாய்கள்
5. மேற்றோல்
6. 1- உயிரற்ற கலங்கள், 2 - உயிருள்ள கலங்கள்
7. மெலனின்
8. புறஊதாக்கதிர்களில் இருந்து தோலைப் பாதுகாத்தல்
9. வியர்வைச் சுரப்பி, நெய்ச்சுரப்பி, தசை, நரம்பு, குருதி மயிர்த்துளைக் குழாய்கள்
10. உட்தோலின் கீழாகக் காணப்படும் அடிப்பேசு எனும் இழையத்தில்
11. 1 - பாதுகாப்புப் போர்வையாகத் தொழிற்படல், 2 - உடல் வெப்பநிலையைச் சீர்ப்படுத்தல், 3 - புலனங்கமாகத் தொழிற்படல், 4 - விற்றமின் D ஐ தொகுத்தல், 5 - கழிவங்கமாகத் தொழிற்படல்
12. உடலிருந்து நீர் வெளியேறுவது தடுக்கப்பட்டு உடல் உலர்தலிலிருந்து பாது காக்கப்படும்
13. நுண்ணங்கிகளினால் ஏற்படும் தாக்கங்களிலிருந்து தோல் பாதுகாக்கப்படும்.
14. புறச்சூழல் வெப்பநிலை உடல் வெப்பநிலையை விட அதிகரிக்கும் போது வியர்வைச் சுரப்பியினால் வியர்வை சுரக்கப்பட்டு உடல் வெப்பநிலை சீராக்கப்படும்.
15. அமுக்கம், தொடுகை(பரிசம்), வெப்பம்

**தோலை ஆரோக்கியமாகப் பேணுவதற்கு மேற்கொள்ளக்கூடிய வழிமுறைகள்**

1. போசாக்குமிக்க உணவை உட்கொள்ளல், முறையாகத் தோலைப் பராமரித்தல், சூரிய ஒளியிலிருந்து பாதுகாத்தல்,புகைத்தலையும் மது அருந்துதலையும் தவிர்த்தல்.
2. விற்றமின் A, E
3. பழங்கள், புதிய காய்கறிகள் (fresh vegetable)
4. புகைத்தலானது குருதிக்கலன்களைச் சுருக்கமடைய செய்கின்றது, இதனால் தோற் கலங்களிற்கான குருதிச் சுற்றோட்டம் குறைவடைவதால் தோற்கலங்களுக்கு தேவையான ஒட்சிசன், போசாக்கு குறைவடைவதால் தோல் பலவீனமடைவ துடன் சுருக்கமடைந்து வயதான தோற்றத்தைக் காட்டும்.
5. 1 - பருத்தி உடைகளை அணிதல், 2 - ஏனையோரின் உடை, பயன்படுத்திய பொருட்களைப் பயன்படுத்தாதிருத்தல், 3 - தோலின் மாற்றங்கள் (பரு, மரு, சிரங்கு) ஏற்படின் வைத்தியரை நாடல், 4 - மன அழுத்தத்தை தவிர்த்து சிறந்த உள ஆரோக்கியத்தைப் பேணல்.
6. தேமல், தோலுரிதல், தோலில் மருக்கள் தோன்றல், முகப்பரு தோன்றல், காலடியிலுள்ள தோல் உலர்ந்து வெடித்தல், எக்ஸீமா.

**ஆக்கம் - செல்வி ஜெனுஷியா கில்பேட் குணம்**
**கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியை (யாழ்/ செங்குந்த இந்துக் கல்லூரி)**
**யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.**
**வழிகாட்டலும் ஆலோசணையும் - திரு. ஞானமணி இரத்தினசிங்கம்**
**ஓய்வுநிலை விரிவுரையாளர், யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.**



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

அங்கம் 80



**245. ஜெய்சங்கர் சொல்லுகின்ற அது எது? எதைச் சொல்கிறீர்கள்? 13 ஆவது சரத்தையா அல்லது ஒப்பந்தத்தையா?**

ஒப்பந்தத்தில் இருந்து பிறந்ததுதான் 13ஆவது சரத்து. ஆனால் குடியரசு சட்டத்தில் 13ஆவது சரத்துத்தான் உள்ளது. அதையே இல்லாமல் செய்யவேண்டும் என்பதுதான் போருக்கு பின் சிங்கள ஏகாதிபத்தியத்தின் நிலை. இதையாவது தக்கவைக்கப் பாடுபடுங்கள் என்பதுதான் ஜெய்சங்கரின் அறிவுறுத்தல். இதற்குமேல் ஒப்பந்தம் இரு நாடுகளும் சம்பந்தப்பட்டது. அதில் தமிழர்கள் விவகாரமும் உண்டு. அதையும் தக்க வைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லுகிறார்.

**246. அப்படியானால் விடுதலைப் புலிகள் இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுப் பயணத்திருக்க வேண்டும் என்று சொல்கிறீர்களா?**

இவை எல்லாம், பின்னர் வந்த சந்திரிகா தர விரும்பிய தீர்வு, ஒஸ்லோவில் ஏற்றுக் கொள்ளப்பட்டவை என காலங்கடந்து விட்டன. இவை எல்லாம் புத்துயிர் பெற்று மீள வருமா என்பது சந்தேகம்தான். நானும் என்னோடு சேர்ந்தியங்கிய பல பேரும் ஒப்பந்தத்தை ஏற்று நடைமுறைப்படுத்த ஆலோசனைகள் செய்யுமாறு பாலசிங்கத்தைக் கேட்டோம். ஆனால் அவரோ பிரபாகரன் நடத்தப்பட்ட விதத்தில் இது ஏற்றுக் கொள்ளபடமாட்டாது என்றுதான் பதிலளித்தார். மக்களை முன்வைத்து இதைப் பார்க்க வேண்டும் இயக்கத்தை வைத்து அல்ல என்றும் சொன்னேன். மக்களல்ல, அப்பொழுதும் அரசியல் தலைமைதான் (இன்று போல்) முன்னின்றது. விடுதலைப் புலிகளின் நோக்கு, பாலசிங்கம் உட்பட, ஒப்பந்தம் ஏற்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டால், தாங்கள் ஓரம் கட்டப்பட்டு, ஜனநாயக அடிப்படையில் அமிர்தலிங்கம் தலைவராக வருவதற்கு வழி செய்யப்படும், தங்களால் – ஆயுத பலத்தால் – அதன் பின் எதுவும் சாதிக்க முடியாதென்பதே.

ஆகவே அவர்(பாலசிங்கம்) உடனடியாக விடுதலைப் புலிகளுக்காக எழுதியது :-

"இந்த ஒப்பந்தம் நேரடியாக எமது இயக்கத்தை பாதிக்கிறது. எமது அரசியல் இலட்சியத்தைப் பாதிக்கிறது. எமது போராட்ட வடிவத்தைப் பாதிக்கிறது. எமது ஆயுதப் போராட்டத்துக்கும் ஆப்பு வைப்பதாக அமைகிறது.

இங்குள்ள வார்த்தை பிரயோகங்களை பார்க்கும்போது மக்களின் ஒத்துழைப்பினோடு அவர்களுக்கான விடுதலை என்ற இடதுசாரிச் சித்தாந்தம் துளியளவும் இல்லை. 'இயக்கத்தை பாதிக்கிறது. ஆயுதப் போராட்டத்துக்கும் ஆப்பு வைக்கிறது' என்பதுதான்.

மேலும் போய் –

"15 வருடங்களாக இரத்தம் சிந்தி, தியாகங்கள் புரிந்து, சாதனைகள் ஈட்டி, எத்தனையோ உயிர்களைப் பலி கொடுத்து, கட்டி எழுப்பப்பட்ட ஒரு போராட்ட வடிவம் ஒரு சில தினங்களில் கலைக்கப்படுமானால் அதனை எம்மால் ஜீரணிக்க முடியாது. தமிழீழத் தனியரசே தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை அளிக்கும் என்பதில் அசையாத நம்பிக்கை உண்டு. தமிழீழ லட்சியத்திற்காக நான் தொடர்ந்து போராடுவேன் என்பதை நான் திட்டவட்டமாக உங்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன்."

இந்த வாசகங்களிலும், ஓர் அரசியல்வாதியாக மக்களைப் பற்றிய சிந்தனைகளில் எழுந்த வார்த்தைகள் இல்லை. தம்மை, தமது ஆயுதப் போராட்டத்தையே நிலைநிறுத்துவோம் என்று மேல் அழிவுகளுக்கு கட்டுமானம் போட கேட்கப்பட்டவற்றையே, உணர்ச்சியை தூண்டி எழுதப்பட்டது.

இந்தியா திம்பு பேச்சுவார்த்தைகளில் எல்லா விடுதலை இயக்கங்களிடமும் தாங்கள் தனித்தமிழீழ அரசுக்கு ஆதரவு தரமாட்டோம் என்றும், தமது பிராந்திய நோக்கங்கள் அதற்கு இடங்கொடுக்காது எனவும் கூறி தனித் தமிழீழத்திற்கு குறைவான ஆயினும் சுய ஆட்சிக்கான அடிப்படையில் ஒரு தீர்வை தருமாறு கேட்டது.

அதேபோல் ஶ்ரீலங்கா பிரதிநிதிகளிடமும், தங்களுடைய அனுமானத்தில் இந்தியாவின் பல நிலங்கள் அனுபவிக்கின்ற உரிமைகளின் அடிப்படையில் தீர்வு தரவேண்டும் என அவர்கள் (இந்தியத் தரப்பினர்) சொல்லியிருந்தார்கள்.

ஶ்ரீலங்கா அரசோ இவற்றை எதிர்பார்க்கவில்லை. விடுதலை இயக்கங்களும் கூட, இந்தியாவினால் ஶ்ரீலங்காவைக் கட்டுக்குள் கொண்டு வரமுடியாவிட்டால் பங்காளாதேசம் போன்று ஒரு தனிநாட்டை அமைத்துக் கொடுக்கும் என்றுதான் எதிர்பார்த்தார்கள்.



ஆனால்பாலசிங்கமோ. மேற்படி எழுத்துக்களில் தமிழீழத் தனியரசே எனத் திம்பு பேச்சுக்கள் எல்லாவற்றையும் உதறி ஓர் அரசியல் நியாயத்தை உணர்ச்சிக்கு கற்பித்தார்.

இவற்றைபுரிந்துகொள்ளத் திம்புத் தீர்மானத்தை விளங்கிக் கொள்ளவேண்டும்.

**247. திம்புத் தீர்மானம் என்ன சொன்னது?**

திம்பு பேச்சுவார்த்தைகளில் அன்றிருந்த எல்லா விடுதலை இயக்கங்களும் பங்கு கொண்டன. விடுதலைப் புலிகளுக்காக லோரன்ஸ்திலகர் அன்ரன் சிவகுமாரன், ஈ.பி.ஆர்.எல்.எவ்விற்காக வரதராஜப்பெருமாள், கேதீஸ்வரன், ரெலோவிற்காக சார்ல்ஸ் அன்ரனிதாஸ், மோகன், ஈரோஸின் பெயரில் ராஜி சங்கர், இரத்தின சபாபதி, புளொட்டிற்காக இரா.வாசுதேவா, சித்தார்த்தன், கூட்டணி சார்பில் சிவசிதம்பரம், அமிர்தலிங்கம் இரா.சம்பந்தன்.

இவர்களில் இன்று வரதராஜபெருமாள், சார்ல்ஸ் அன்ரனி தாஸ், சித்தார்த்தன், இரா. சம்பந்தன், அன்ரன் சிவகுமாரன் தான் உயிரோடு இருக்கிறார்கள். ஆனால் அன்று அவர்கள் எல்லோரும் திம்பு தீர்மானத்தை ஒன்றிணைந்து, தமிழ் மக்களுக்காக பங்குபற்றியவர்களால் கொடுக்கப்பட்டதாகக் கூறியதனைக் கையளித்தனர்.

இன்று வரையான அரசியல் நிகழ்வில் திம்பு தீர்மானமும் அதில் பங்கு பற்றிய முறையும்தான் தமிழ் மக்களுக்காக ஒற்றுமையாக நிகழ்த்தப்பட்ட நிகழ்வு. ஆனால் இதைக் கவனித்தால், இதில் முன்னணித் தலைவர்கள் டெல்லி வரைச் சென்றிருந்தாலும் பங்கு பற்றவில்லை –தமிழர் விடுதலைக் கூட்டணியையும் ஈரோஸையும் தவிர.

ஜே.ஆர். தமது அரசியல் தலைவர்கள் யாரையும் அனுப்பாமல் சட்டத்தரணியான தனது தம்பியையும் சக சட்டத்தரணிகளையும் அரசாங்க உத்தியோகத்தர்களையும் அனுப்பியமைக்கு எதிராக இவர்களும் இரண்டாம் மட்டத்திலேயே அங்கத்தவர்களை அனுப்பினாலும், தலைவர்கள் பாலசிங்கம் உட்பட பின்னணியிலிருந்து கவனித்துக் கொண்டனர். அப்பொழுது உருவாகியிருந்த ஈழத் தேசிய விடுதலைப் முன்னணி (ENLF). இது விடுதலைப் புலிகள், ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈரோஸ், ரெலோ இயக்கங்களின் ஒரு புரிந்துணர்வு கூட்டு. அதற்கு திம்புவில் பத்மநாபா, வரதராஜபெருமாள், பாலசிங்கம் அரசியல் போதனைகள் தந்தனர். இந்தப் பேச்சுக்களுக்கு விடுதலை இயக்கங்கள், சடுதியாக கட்டாயப்படுத்தப்பட்டுதான் முதல் டெல்லிக்கு அழைத்து செல்லப்பட்டார்கள். அங்கு 5 நட்சத்திர அசோகா ஹோட்டலில்தான் வைக்கப்பட்டார்கள். இந்தியாவின் 'றோ' அமைப்பு அவர்களைக் கண்காணித்தது. சுதந்திர நடமாட்டத்துக்கு இடம் தரவில்லை. அவர்களே தேவையான இடங்களுக்கு அழைத்து போனார்கள்.

சக்ஸேனா என்ற றோவின் தளபதி அவர்களோடு பேசி, ஏன் அவர்கள் பேச்சில் ஈடுபடவேண்டும், என்ன எதிர்பார்க்கலாம், நிபந்தனைகள் வைப்பதால் வரக் கூடிய விளைவுகள் என்ன, ஆனால் இந்தியா தமிழ் மக்கள் பின் நிற்கும் என்று அறிவுறுத்தல்களைச் செய்தார்கள். ஜே.ஆரை அறிந்த விடுதலை இயக்கங்களும் அதனை சாதுரியமாக கையாள்வதற்கு கூட்டணியினரோடும் சேர்ந்து திட்டங்கள் போட்டனர்.

(வளரும்....)



ஒரு காலத்தில் தந்தை செல்வநாயகத்தின் தமிழரசுக் கட்சி என்ற இரட்டைக் குழல் துப்பாக்கியின் சுடுகுழல்களாகக் கனன்றவர்கள் இருவர். ஒருவர் - வடக்கின் அமிர்தலிங்கம். மற்றவர் - கிழக்கின் மட்டுநகர் தந்த 'சொல்லின் செல்வர்' இராஜதுரை. அரசியலில் இருந்து கால் நூற்றாண்டுக்கு மேல் ஒதுங்கி சாயி பக்தராக அமைதியாக சென்னையில் வாழ்கின்றார் இராஜதுரை. அவருக்கு நேற்று 94 ஆவது பிறந்தநாள்.

அவரது மிக நெருங்கிய நண்பராக இருந்தவர் ஊடக ஜாம்பவான் அமரர் எஸ்.டி.எஸ். சிவநாயகம். சிவநாயகம் ஐயாவின் மகன் எஸ். டி.எஸ். உதயநாயகம் தனது தந்தையாரின் நெருங்கிய நண்பர் பற்றிய நினைவுகளை இங்கே பகிர்கின்றார். மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக்கொடுக்க தேவையில்லை என்பர். எஸ்.டி.எஸ். ஐயாவின் ஆற்றொழுக்கான எழுத்தோட்டத்தை மகனின் இந்த நினைவுப் பகிர்வில் நீங்கள் காண முடியும்.

கொழும்பு ஸ்ரீ சத்திய சாய் பாபா மத்திய நிலையத்தை ஸ்தாபித்து அதன் தலைவராகக் கால் நூற்றாண்டு காலம் விளங்கினார் எஸ்.டி.எஸ். சிவநாயகம் அவரைத் தொடர்ந்து அவரின் வழியில் கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக அதன் தலைவராக இருந்து அதனை வழிநடத்தி வருகின்றார் எஸ்.டி.எஸ். உதயநாயகம்

எஸ்.டி.எஸ்.உதயநாயகம்

அங்கம் 02

# 'சொல்லின் செல்வர்' செல்லையா இராஜதுரை

தேர்தல் வெற்றிக்குப்பின், அவரது கட்சி அலுவலகமான 'இளங்கோ அச்சகத்திலிருந்து' அவரை ஊர்வலமாக அழைத்துச்சென்ற போது, ஒரு சம்பவம். தேர்தலில் தோற்றுப் போன துரைராஜா என்பவர், துப்பாக்கியால் இவரைச் சுடுவதற்கு எத்தனித்த சமயம், பலரும் அஞ்சி ஓட்டமெடுக்க, இவர் அதே சிரித்த முகத்துடன், துணிச்சலுடன் அவரிடம் சென்று, 'அண்ணே! துரைராஜா' என்றார். அவ்வளவுதான் 'என்னுடைய எம்.பிக்கு நான் கொடுக்கும் மரியாதை வரவேற்பு இது தான்!' என்று கூறி வானத்தை நோக்கி இரு வேட்டுக்களைத் தீர்த்தார். அப்போது இராஜதுரையின் தைரியத்தை கூட்டத்திலிருந்த அனைவரும் மெச்சினார்கள்.

அது மட்டுமல்ல தொடர்ந்து வந்த அனைத்துத் தேர்தல்களிலும், தோற்காத எம்.பி. என்றும், 33 ஆண்டுகளாக ஒரே தொகுதியைப் பிரதிநிதித்துவம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் என்றும் பெயரெடுத்து, முடிசூடா மன்னனாக, எப்போதும் மட்டக்களப்பு முதலாவது நாடாளுமன்ற உறுப்பினராக பிரகாசித்தார். தொடர்ந்து 33 வருடங்கள் எம்.பியாக இருந்துவிட்டு, 1989 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில், தனக்கு வெற்றி வாய்ப்பு இருந்தும், பெரும் தன்மையுடன் இளைஞர்களின் எண்ணங்களுக்காக விட்டுக் கொடுத்தார்.

தமிழ் அரசியல் வரலாற்றில், இளைஞர்களுக்காக 'நான் போட்டியிடவில்லை' என்று விலகிக் கொண்ட இவரது துணிவு, வேறு யாருக்கு வரும்?

அவரது இன்னொரு சாதனை, நாடாளுமன்ற உறுப்பினராக இருந்துகொண்டு, முதன் முதலில் தோற்றுவிக்கப்பட்ட மட்டக்களப்பு மாநகர சபைக்கு, முதலாவது மேயராகப் பதவியேற்றார். மட்டுநகரை அழகுபடுத்தினார். அங்கு நிறுவப்பட்ட காந்தி, பாரதி சிலைகள் கூட இவரது அடையாளம்தான்.

1956 ஆம் ஆண்டு, தனது மோட்டார் வாகன இலக்கத் தகட்டிலுள்ள ஆங்கில எழுத்தை மாற்றித் தமிழ் எழுத்தைப் பொறிக்கச் செய்ததற்காக, மூன்று மாதம் சிறை சென்றார். அது அல்ல செய்தி. சட்டத்தைப் போட்ட இலங்கை முன்னாள் பிரதமர் பண்டாரநாயக்காவை, அதே துணிச்சலுடன் தைரியத்துடன் தனது தமிழ் எழுத்து பொறிக்கப்பட்ட 'ஈ.எல்.



5967' என்ற அதே காரில் பயணம் செய்ய வைத்தமைதான் மறக்கமுடியாத செய்தி. அந்தக் காலகட்டத்தில் அனைத்து மொழிப்பத்திரிகைகளிலும் அந்தப் படமும், செய்திகளும் பிரசுரமாகி, அது ஒரு பெரும் அரசியல் பேசுப் பொருளாக மாறியது.

அரசியல் கைதியாக பல தடவைகள் சிறை சென்றிருக்கிறார். அதிலும் 1971 ஆம் ஆண்டு அரசியல் போராட்டம் காரணமாக, ஆறு மாத காலம், பனாகொடை இராணுவ முகாமில், சித்திரவதை செய்யப்பட்டு அடைக்கப்பட்டிருந்தார்.

இலக்கிய விழா, சமய விழா, அரசியல் மகாநாடு அனைத்திலும் தனது பேச்சுத் திறமையை, நாவன்மையை, தமிழை வெளிப்படுத்தினார். அவரது பேச்சுக்காக மக்கள் பல மணிநேரம் காத்திருப்பார்கள். இவர் பேசியமையுடன் மக்கள் கலைந்து விடுவார்கள். அதனால் கலைஞர் கருணாநிதி, அறிஞர் அண்ணா போன்று, அவரை கூட்டத்தின் ஆரம்பத்திலோ அல்லது மத்தியிலோ பேச விடமாட்டார்கள். இறுதிப் பேச்சாளர் இவராகத்தான் இருக்கும். யாழ்ப்பாணத்தில் நடுநிசி பன்னிரெண்டு மணிக்கும் இராஜதுரை அவர்களைப் பேச அழைத்த வரலாறும் உண்டு.

மலேசியாவில் முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் பிரபல பேச்சாளர்கள் மா.பொ.சி., கி.வா.ஜெகநாதனுடனும், சென்னையில் இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் அறிஞர் அண்ணாவுடனும், மதுரையில் ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் தமிழக முதல்வர் திரு.எம்.ஜி.ஆருடனும், கோலாலம்பூரில் ஆறாவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் கலைஞர்



கருணாநிதியுடனும் அவர் ஆற்றிய தமிழ் பேருரைகள், உலக தமிழ் அறிஞர்களை விழிப்படையச் செய்தன. இலங்கை மண்ணுக்குப் பெருமை தேடித்தந்தன.

இவர் நாடாளுமன்ற உறுப்பினராக மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்தமை. ஒரு சிலருக்குப் பொறாமையாக இருந்தது. கொலை செய்ய முயற்சிக்கும் அளவுக்குச் சென்றுவிட்டது. செங்கலடியில் உள்ள, தமிழரசுக் கட்சியின் கல்குடா எம்.பி. மாணிக்கவாசகருடைய வீட்டுக்குச் சென்று ஓய்வெடுத்த சமயத்தில் அந்த இடத்தை நோட்டம் பார்த்து வைத்திருந்து, அவரது அரசியல் எதிரிகள், ஒரு நாள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். அங்கும் தெய்வாதீனமாகத் தப்பித்துக் கொண்டார்.

அவரது மேடைப் பேச்சு, எழுத்தோட்டம், அரசியல் வளர்ச்சி, நாடாளுமன்றத்தில் சொற்போர், அனைத்துக் கட்சி உறுப்பினர்களின் சிநேகம், தமிழ்நாட்டு பிரமுகர்களின் அறிமுகம் – இவை அனைத்தும் அவரது கட்சிக்குள் இருந்த ஒரு சிலருக்கு எரிச்சலைத் தந்தது. வெறுப்பும், குழிபறிக்கும் எண்ணங்களும் தோன்றத் தொடங்கின. 'மட்டக்களப்பான்' என்ற துவேசம் மேலெழுந்தது. அவரதுக் கட்சிக்காரர்களே துரோகம் செய்யத் தொடங்கி விட்டார்கள். சில சந்தர்ப்பங்களில் காலை வாரியும் விட்டார்கள்.

அந்தச் சமயத்தில்தான், தனது மனக் கவலையை – தனது கட்சிக்குள் நடக்கும் சதியை – தனது நெருங்கிய நண்பர் கவியரசு கண்ணதாசனிடம், மனம்விட்டு கூறியிருக்கிறார். இதனை கவியரசு தனது அரசியல் கட்டுரையில் எழுதியிருந்தார்.



இராஜதுரை அவர்கள் கட்சிக்காக, அதன் வளர்ச்சிக்காக, ஏனைய சக உறுப்பினர்களுக்காக வடக்கு, கிழக்கு மகாணங்களில் பல மேடைகளில் கொள்கைகளை விளக்கி பிரச்சாரம் செய்து, நன்றியுடன் விசுவாசமாக இருந்து வந்தபோது, கட்சியின் மேலிடம் அவரது ஒரே மட்டக்களப்புத் தொகுதியில் இவருக்கும், மற்றுமொரு தமிழரசு வேட்பாளர் கவிஞர் காசி ஆனந்தனுக்கும் கட்சி வேட்பாளர் நியமனத்தைக் கொடுத்தும் மட்டுமல்லாது, கடைசியில் காசி ஆனந்தனை அதிகாரபூர்வமாக அறிவித்தது. தனக்கு பின் முதுகில் குத்தி விட்டார்கள் என்றும், தந்தை செல்வா இருந்திருந்தால் இப்படி நடக்க விட்டிருக்கமாட்டார் என்றும் இராஜதுரை வருத்தப்பட்டாராம். இருந்தாலும் இறுதியில் அதிக வாக்குகளுடன், தனது தனிப்பட்ட செல்வாக்குடன் இராஜதுரையே வெற்றிபெற்றார்.

கட்சிக்கும், கட்சியில் இருப்பவர்களுக்கும் உதவி செய்ததுபோதும், இனி தமிழுக்கும், தமிழ் பிரதேச மக்களுக்



கும் மற்றும் இந்து சமயத்துக்கும் தன்னால் முடிந்ததைச் செய்யலாம் என்ற எண்ணத்தில் 1979 ஆம் ஆண்டு இலங்கையில் முதன் முதலாகவும் இறுதியுமான, முழு அமைச்சரவை அந்தஸ்துள்ள 'இந்து கலாச்சார, தமிழ் மொழி அமுலாக்கல், பிரதேச அபிவிருத்தி' என்ற புதிய அமைச்சை அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா மூலமாக பிரத்தியேகமாக உருவாக்கி, அமைச்சராகிப் பல சாதனைகளைப் படைத்தார்.

எனது தந்தை திரு.எஸ்.டி.எஸ். அவர்கள் சுதந்திரன் பத்திரிகையில் ஆரம்ப காலத்தில் குயுத்தி கேள்வி – பதிலில் 'மட்டக்களப்பின் பெருமை எவை?' என்ற கேள்விக்கு, பதிலாக 'பாடும் மீன்கள், பாடாத பெண்கள், பேசாத பிரதிநிதி' என்று பதிலலித்திருந்தார். அதனைப் பொய்யாக்கியவர் இராஜதுரை அவர்கள். எம். பியாக நாடாளுமன்றத்தில் சொற்போர் புரியும் பிரதிநிதியாகவும், அமைச்சரான பின்னர், மட்டக்களப்பு பெண்களை இசைத்துறையில் மேம்படவைப்பதற்காக, 'சுவாமி விபுலானந்தர் இசை நடனக் கல்லூரியை' ஸ்தாபித்து, பாடத்திட்டங்களை தமிழகக் கலைமாமணி திரு. ரி.எஸ்.சிவானந்தன் பிள்ளை மூலம் தயாரித்து, தமிழக முதல்வர் திரு.எம்.ஜி.ஆர். மூலமாக இசைக் கருவிகளையும், இசைநூல்களையும் வரவழைத்து இசைத்துறையை மேம்பட வைத்தார்.

ஆரம்பத்தில் நாஸ்திகராக இருந்து ஆலயங்களில் மிருக பலியை எதிர்த்துப் போராடியமை மட்டுமல்ல, பூசாரியையும் தாக்கியவர், தமது அமைச்சர் பதவியில் ஆலயங்களில் மிருகப் பலியிடுதலை சட்டம் மூலம் தடுத்து நிறுத்தினார். 1983 ஆம் ஆண்டுக் கலவரத்தில் சிதைந்துபோன 75 கோவில்களை கட்டியெழுப்பி நித்திய பூஜைகளுக்கு வழிவகுத்தவர். அகில உலக இந்து மகா நாட்டை நடத்தினார். உலக இந்து ஆராய்ச்சி நிறுவனம், இந்துக் கலைக்களஞ்சியம், பனம்பொருள் அபிவிருத்திப் பொருளாதாரம், கதிர்காமம் இந்து சமய விடுதி, நாவலர் கலாச்சார மண்டபம், இந்துக் கோவில்களின் தேவைகளை நிறைவு செய்தல், இலங்கையிலுள்ள தமிழ் சங்கங்களின் வளர்ச்சி – அபிவிருத்தி ஆகியவற்றை தனது அமைச்சினூடாக செய்து காட்டியவர்.

தென் மாகாண பௌத்த ஆலயங்களில் சென்று உரையாற்றிய பெருமை இவருக்குண்டு. பௌத்த துறவிகள் முன்னிலையில் பௌத்தர்கள் தமிழுக்கு ஆற்றிய தொண்டினை சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்களை எடுத்துக் காட்டி சொற்பொழிவாற்றியவர். சைவ சித்தாந்தக் கொள்கையை விளக்கி, தமிழுக்கும் சிங்கள மொழிக்கும் உள்ள உறவை நாசூக்காக எடுத்துக்கூறியவர். பல சிங்கள சகோதரர்கள் அவரது பரந்த மனப்பான்மையை மெச்சினார்கள். தமிழர்களின் இந்து நாகரிகத்தை, அவரது பேச்சுவழியாக தெரிந்துகொண்டார்கள். அவரது பேச்சை அவரது அமைச்சில் கடமைபுரிந்த திரு. நாணயக்காரா அவர்கள் எப்போதும் மொழிமாற்றம் செய்வதுண்டு.

(வளரும்)



காலைக்கதிர் Kalaikkathir

# நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் வலையமைப்பை ஏற்படுத்தியவர் மகேந்திரன்

## அஞ்சலிச் செய்தியில் பிரதமர் புகழாரம்



கப்பிடல் மஹாராஜா குழுமத்தின் தலைவர் ஆர்.ராஜமகேந்திரன் அவர்களின் மறைவு செய்தி அறிந்து நான் மிகவும் மனவருத்தமடைந்தேன். திறமையான தொழிலதிபராக இந்நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் வணிக வலையமைப்பை பராமரித்து வந்த ஆர்.ராஜமகேந்திரன் அதனூடாக லட்சக்கணக்கான மக்களுக்கு உறுதுணையாக விளங்கினார்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

அவரது இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

சிரச, சக்தி, எம்.ரி.வி. ஆகிய ஊடக வலையமைப்பின் உரிமையாளராக மக்களின் தகவல் அறியும் உரிமைக்காக தொடர்ந்தும் முன்நின்ற ஆர்.ராஜமகேந்திரன் நமது நாட்டின் தொலைக்காட்சி மற்றும் வானொலி துறையை நவீனமயப்படுத்துவதில் முன்னோடியாகத் திகழ்ந்தார்.

மக்களுக்கு உண்மை செய்தியை வழங்குவதற்கும் மேலாக 'கம்மெத்த' போன்ற நிகழ்ச்சிகளின் ஊடாக கிராம மக்களின் வளர்ச்சிக்கு வழிவகுத்த ஆர்.ராஜமகேந்திரன், ஒரு திறமையான தொழிலதிபராகவும் சமூக சேவையாளராகவும் இந்நாட்டுக்காக தனது கடமையை நிறைவேற்றியுள்ளார்.

ஆர்.ராஜமகேந்திரனின் பிரிவால் வாடும் அவரது மனைவி, புதல்வர் ஷீ.ராஜமகேந்திரன், புதல்விகள் உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அனைத்து உறவினர்கள், நண்பர்கள் மற்றும் கப்பிடல் மஹாராஜா குழுமம் உள்ளிட்ட சிரச, சக்தி, எம்.ரி.வி. ஊடக வலையமைப்பைச் சேர்ந்த அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறேன். - என்றுள்ளது.

# மிகச் சிறந்ததொரு சமூகசேவையாளர் மகாராஜா குழுமத் தலைவர் மகேன்!

## ஆனந்தசங்கரி அஞ்சலி



எனது நீண்டகால நண்பரும், சிரச, சக்தி ஊடக வலையமைப்பின் தலைமை நிறுவனமான கப்பிடல் மகாராஜா குழுமத்தின் தலைவருமான ஆர். ராஜமகேந்திரனின் (கிளி) மரணச் செய்தி கேட்டு நான்பேரதிர்ச்சி அடைந்தேன். ஒரு மிகச் சிறந்த சமூக சேவையாளரை இந்த நாடு இழந்துவிட்டது.

மகாராஜா குழுமத் தலைவர் இராஜமகேந்திரனுக்கான அஞ்சலி செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி.

அவரது அஞ்சலி செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

மிக நீண்டகாலமாக எனது ஒவ்வொரு வருட பிறந்த தினத்துக்கும் வாழ்த்துக்கள் தெரிவிப்பார். கடந்த ஜூன் மாதம் 15 ஆம் திகதி எனது பிறந்ததினத்துக்கு இவரின் வாழ்த்து கிடைக்கவில்லை. என்னை விட்டு மறையப் போவதை எனக்கு சூசகமாக இறைவன் தெரிவித்தது போல் நான் இப்போது உணர்கின்றேன்.

எம்முடைய சிபாரிசின் பேரில் பல அமைப்புக்களுக்கு அளப்பரிய உதவிகள் செய்துள்ளார். தன்னுடைய ஊடக வலையமைப்பை சமூக நலன் சார்ந்த திட்டங் களுக்கே பயன்படுத்திய ஒரு தலைசிறந்த சமூக ஆர்வலர். சமூகத்தின்மீது அளவு கடந்த பற்றுக் கொண்டவர். வறுமையில் வாடுபவர்களுக்கு தேடிப்போய் உத விகள் செய்வதற்கு தன்னுடைய ஊடகத்தைப் பயன்படுத்தியவர்.

மலையக மக்களின் அவலம் நிறைந்த வாழ்க்கை முறைமையை தன்னுடைய ஊடக வலையமைப்பு மூலம் வெளிச்சம் போட்டுக்காட்டி அரசியல்வாதிகளையும் அதிகாரிகளையும் அவர்கள் பக்கம் திரும்ப வைத்து அந்த மக்கள் பல நன்மைகள் பெறக் காரணமாக இருந்தார் என்றால் அது மிகையாகாது.

இயற்கை அனர்த்தங்களானாலும் சரி வேறு வகையில் ஏற்படும் அனர்த்தங்களானாலும் சரி முதலில் தேடிப் போய் உதவிகள் செய்ய தனது ஊடகத்தைப் பயன்படுத்தி ஒரு தனி முத்திரை பதித்துக்கொண்டவர்.

எமது நாட்டில் வாழும் சகல இன, மத, மொழி மக்களின் வைபவங்கள் மற்றும் விசேட நாள்களை அந்தந்த மத சம்பிரதாயங்களுடன் மிகச் சிறப்பாகவும் வெகு விமர்சையாகவும் நடத்தி நாட்டின் ஒற்றுமையை நிலைநிறுத்தியவர். குறிப்பாக வெசாக் பண்டிகை,கிறிஸ்மஸ் பண்டிகை மற்றும் ஹஜ் பெருநாள் என்பவற்றை குறிப்பிடலாம்.

சமூக நலன் சார்ந்து புதிய புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்தி எமது நாட்டு மக்கள் அனைவரையும் ஒரே கண்ணோட்டத்தில் பார்த்தவர். இவ்வாறானவர்கள் இனிப் பிறப்பது அரிது. ஒரு மிகச்சிறந்த இறை பக்தி கொண்டவர் அன்னாரின் இழப்பு ஈடு செய்ய முடியாத எவராலும் தாங்கிக் கொள்ள முடியாத ஒரு பேரிழப்பாகும்.

அன்னாரை இழந்து தவிக்கும் அவரின் குடும்பத்தினருக்கும், கப்பிடல் மகாராஜா குழுமத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கின்றேன். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். - என்றுள்ளது.

# யாரை விட்டது கொரோனா..!

**கோடிப்பணமிருந்தும் கூட உறவிருந்தும்**
**தேடிச்சொத்திருந்தும் தேட்டம் பல இருந்தும்**
**நாடிச்செல்வாக்கு நாட்டில் எல்லாம் இருந்தும்**
**மாடிமனை இருந்தும் மகா செல்வம் இருந்தும்!**

**போற்றி புகழ்வதற்கு உலகத்தில் ஆள் இருந்தும்**
**வெற்றிப்படிகள் வெவ்வேறு உயர்வாய் இருந்தும்**
**சுற்றிவர எங்கும் சொகுசான வாகனம் இருந்தும்**
**கற்றறிந்த நல்ல வைத்தியர்கள் தான் இருந்தும்!**

**கடவுள் இட்ட கட்டளை மனிதரால் மாறாது**
**கொரோனா மரணம் கூடி அஞ்சலி இல்லை**
**இறுதிச்சடங்கையும் இனம் பார்க்க முடியவில்லை**
**இறுதி கிரியைகளில் எவருமே செல்லத்தடை!**

**உறுதி மிக்க மகான் ராஜமகேந்திரன் ஐயா**
**உண்மையாய் வாழ்ந்து நல்லவைகள் செய்தவர்**
**வல்லமை கொண்டு வளர்ச்சி பல பெற்ற மகான்**
**உள்ளத்தால் நாமும் மனதார அஞ்சலிப்போம்!**

**- அம்பிளாந்துறையூர் அரியம் -**

## அதிக எண்ணிக்கையானோருக்கு ஒரே நாளில் கொரோனாத் தடுப்பூசி

இலங்கையில் ஒரேநாளில் அதிக எண்ணிக்கையிலான அதாவது 4 லட்சத்து 37 ஆயிரத்து 878 பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

தொற்றுநோயியல் பிரிவு தரவுகளின்படி, இதுவரை 74 லட்சத்துக்கும் அதிகமானவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசிகள் இலங்கையில் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கு முன்னர் ஜீலை 24 அன்று 4 லட்சத்து 12 ஆயிரத்து 211 தடுப்பூசிகள் ஒரே நாளில் செலுத்தப்பட்டமையே அதிக எண்ணிக்கையாக இருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

# கப்பிடல் மகாராஜா குழுமத் தலைவர் மகேந்திரனின் மறைவு பேரிழப்பாகும்!

## முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா அனுதாபம்



கப்பிடல் மகாராஜா கூட்டு நிறுவனங்களின் தலைவரும் சக்தி தொலைக்காட்சி, சக்தி வானொலி ஆகியவற்றின் தலைவருமான ராஜ மகேந்திரனின் மறைவு ஊடகத்துறைக்கும் வர்த்தகத்துறைக்கும் பேரிழப்பாக அமைந்திருக்கின்றது. ஊடகத் துறையைப் பொறுத்தவரையில் இலத்திரனியல் ஊடகங்களை ஆரம்பித்து அதில் சாதனை படைத்த ஒருவராக இவர் திகழ்கின்றார். இவரது இழப்பு ஊடகத்துறையில் பெரும் வெற்றிடத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

- இவ்வாறு முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ராஜமகேந்திரனின் மறைவையடுத்து அவர் விடுத்துள்ள அனுதாபச் செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

கப்பிடல் மகாராஜா கூட்டு நிறுவனத்தின் தலைவரும், சக்தி தொலைக்காட்சி, சக்தி வானொலியின் உரிமையாளருமான ராஜமகேந்திரன் சுகவீனமடைந்த நிலையில் காலமாகியுள்ளமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது.

வர்த்தகத்துறையிலும் ஊடகத்துறையிலும் சிறந்து விளங்கிய அவரது இழப்பு இதே துறைகளுக்கும் பேரிழப்பாக அமைந்ததுடன் ஊடகத்துறையைப் பொறுத்தவரை பெரும் வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது.

இலத்திரனியல் ஊடகத்துறையில் தனக்கென ஒரு தனித்துவத்தைப் பேணிச் செயற்பட்டு வந்த இவர் வாழும்வரை முகம்காட்டாது சாதனைபடைத்தவராகத் திகழ்ந்தார்.

மனிப்பாயைப் பிறப்பிடமாகக்கொண்டு கொழும்பை வசிப்பிடமாகக்கொண்டிருந்த இவர் வர்த்தகத்துறையில் பெரும் சாதனைகளையும் படைத்தவராவார். உற்பத்தித்துறை, சந்தைப்படுத்தல், ஏற்றுமதி, தகவல் தொடர்பு, ஊடகம், தகவல் தொழில்நுட்பம், உணவு விநியோகம் மற்றும் பொதியிடல் உட்பட பல்வேறு துறைகளிலும் முன்னணி வகித்தவராவார்.

சக்தி தொலைக்காட்சி, சக்தி வானொலி, எம்.ரி.வி. தொலைக்காட்சி, சிரச தொலைக்காட்சி ,வானொலி ஆகிய இலத்திரனியல் ஊடகங்கள் ஊடாக இலங்கையின் ஊடகத்துறையில் புரட்சியை ஏற்படுத்தியவராவார்.

துணிச்சல் மிக்க புரட்சியாளரான இவர், இனவாதத்தை எதிர்த்ததுடன் தமிழ் பேசும் மக்கள் சம அந்தஸ்துடன் வாழவேண்டும் என்ற கொள்கையையும் கொண்டிருந்தவர் ஆவர்.

இவரது இழப்பு தமிழ் பேசும் மக்கள் உட்பட இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் பேரிழப்பாகும். இவரது பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினர் மற்றும் சக்தி தொலைக்காட்சி, சக்தி வானொலி ஆகியவற்றின் உத்தியோகஸ்தர்கள், ஊழியர்கள், ஊடகவியலாளர்கள் ஆகியோருக்கும் எமது அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றேன். அவரது ஆத்மா சந்தி அடைய பிரார்த்திக்கின்றேன். - என்று தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# வடக்கு, கிழக்குக்கு 16 இலட்சம் தடுப்பூசிகள் அன்பளிப்பாக நேற்று வழங்கியது சீன அரசு

## ஜனாதிபதி மாளிகையில் வைத்து டக்ளஸிடம் கையளிப்பு



(இ.கலையமுதன்)

இலங்கைக்குச் சீனாவால் அன்பளிப்பாக நேற்று வழங்கப்பட்ட 16 இலட்சம் 'சினோபோர்ம்' கொரோனாத் தடுப்பூசிகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி மாளிகையில் நேற்று நடைபெற்ற இந்த நிகழ்வில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இலங்கைக்கான சீனத் தூதுவர் கியூய் ஜென்ஹொங் ஆகியோர் தடுப்பூசிகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் சம்பிரதாய பூர்வமாகக் கையளித்தனர்.

வடக்கு, கிழக்கைச் சேர்ந்த 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசிகளை வழங்கும் நோக்கோடு சுமார் 16 இலட்சம்'சினோபோர்ம்'தடுப்பூசிகளை சீன அரசு இலங்கைக்கு நேற்று அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாண மக்களுக்கான தடுப்பூசி ஏற்றும் செயற்பாட்டை விரைவுபடுத்துவது தொடர்பில் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் கலந்துரையாடி இந்த விசேட திட்டத்தை ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த தடுப்பூசிகளை இலங்கைக்கான சீனத் தூதுவரினால் ஜனாதிபதியிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது.

இதன்போது, வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான தடுப்பூசிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வழங்கி வைக்கப்பட்டன.

இந்தத் தடுப்பூசிகள் சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பரிந்துரைகளுக்கு அமைய வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அனைத்து மாவட்டங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த நிகழ்வில், சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி மற்றும் சீனத் தூதரக அதிகாரிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## பருத்தித்துறையில் மேலும் 11 பேருக்குக் கொரோனா!

யாழ்ப்பாணம்., ஜூலை 28

யாழ்., வடமராட்சி, பருத்தித்துறை நகர் உள்ளிட்ட பகுதிகளில் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள நிலையில் அங்கு நேற்று முன்னெடுக்கப்பட்ட அதிவிரைவு அன்டிஜன் பரிசோதனையில் 11 பேருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை கண்டறியப்பட் டுள்ளது.

395 பேரிடம் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையிலேயே 11 பேருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவர்களில் மீன்சந்தை வியாபாரிகள் இருவரும், ஓட்டோ சாரதிகள் இருவரும், தனியார் பஸ் சேவை ஊழியர் ஒருவரும், வெதுப்பகம், வர்த்தக நிலையம் ஊழியர்கள் தலா ஒருவரும் மற்றும் மீனவ சங்கப் பிரதி ஒருவரும் அடங்குகின்றனர்.

பருத்தித்துறை நகர அண்டி மருந்தகங்கள் உட்பட அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட் டுள்ளன.அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் வங்கிகள் திறக்கப்படுகின் றன.

பருத்தித்துறை நகரில் இருந்த பஸ் தரிப்பிடம் மூடப் பட்டுள்ளதால் டிப்போ சந்தியிலிருந்து பஸ்கள் சேவையில் ஈடுபடுகின்றன.

## கரவெட்டி புதிய கொத்தணி; மத்தொனி கிராமம் முடக்கம்

யாழ்., வடமராட்சி, கரவெட்டி பிரதேசத்தில் ஒரு பகுதி நேற்று அதிகாலை முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

கரவெட்டி தெற்கில் ஆலய திரு விழா நிகழ்வு ஒன்றில் பங்கேற்றிருந்த 49 பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே கரவெட்டி தெற்கில் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட பகுதியான மத்தொனி கிராம சேவகர் பிரிவு (ஜே/366) சமூக முடக்கலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த ஆலயத் திருவிழாவில் பங்கேற்றவர்களுக்கு பிரசாதம் வழங்கியவர் நோய் அறிகுறிகளுடன் காணப்பட்டார் என்று விசாரணைகளில் தெரியவந்திருக்கின்றது எனச் சுகாதாரத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

## ஹிஷாலினிக்கு நீதி வேண்டி யாழ்ப்பாணத்தில் போராட்டம்



(இ.கலையமுதன்)

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்த டயகமவைச் சேர்ந்த 16 வயது சிறுமியின் மரணத்துக்கு நீதி கோரி யாழ்ப்பாணத்தில் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மகளிர் அமைப்பினர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் மற்றும் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தினர் ஆகியோரின் ஏற்பாட்டில் யாழ். மத்திய பஸ் நிலையத்துக்கு முன்னால் இந்தக் கவனவீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது.

குறித்த போராட்டத்தில் மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் மற்றும் சமூக ஆர்வலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## வடக்கில் தடுப்பூசி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்பட்ட கர்ப்பிணிப் பெண்களுக்கும், முன்களப் பணியாளர்களுக்கும் நாளை முதல் வழங்கத் திட்டமிடப்பட் டுள்ளது என மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட் டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

வடக்கு மாகாணத்தில் கொரோனாத் தடுப்பு மருந்தேற்றல் திட்டத்தின் கீழ் சீனாவில் இருந்து கிடைக்கப்பெற்ற சினோபார்ம் தடுப்பூசிகளில் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு இரண்டு இலட்சமும், வவுனியா மாவட்டத்துக்கு 75 ஆயிரமும் மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு தலா 50 ஆயிரமும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்த நான்கு மாவட்டங்களிலும் இந்தத் தடுப்பூசியானது 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும், 18 வயதுக்கு மேற்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் மற்றும் முன்களப் பணியாளர்களுக்கும் வழங்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஏற்கனவே முதல் இரண்டு கட்டங்களிலும் ஒரு இலட்சம் பேருக்கு முதலாவது தடவை தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. தற்போது 3ஆம் கட்டமாக இரண்டு இலட்சம் பேருக்கு முதலாவது தடவையாக தடுப்பூசி வழங்கப்படவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் நாளை 29ஆம் திகதி வியாழக்கிழமை முதல் தடுப்பூசி வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தடுப்பூசி வழங்கும் நிலையங்கள் பற்றிய விவரங்கள் அப்பிரதேசத்திற்குரிய சுகாதார வைத்திய அதிகாரியால் வெளியிடப்படும்.

இந்தத் தடுப்பூசியானது நாளை வியாழக்கிழமை 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் மற்றும் முன்னுரிமை அடிப்படையில் பாடசாலை ஆசிரியர்களுக்கும் வழங்கப்படவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் பணிபுரிகின்ற ஆசிரியர்களும், யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த வடக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களிலும், ஏனைய மாகாணங்களிலும் பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்கு அவர்களது வதிவிடம் அமைந்துள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் தடுப்பூசிகள் வழங்கப்படும். இவர்கள் தமது ஆசிரிய பணியை உறுதிப்படுத்தும் ஆவணங்களை சமர்ப்பித்து தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

முன்களப் பணியாளர்களுக்கான தடுப்பூசியானது நாளைமறுதினம் 30ஆம் திகதி முதல் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முன்களப் பணியாளர்கள் தமது பிரிவுக்குரிய சுகாதார வைத்திய அதிகாரியைத் தொடர்புகொண்டு தமக்கான தடுப்பூசி வழங்கும் நேரத்தை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.

18 வயதுக்கு மேற்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கு பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்ட தினத்தில் தடுப்பூசி வழங்கப்படும். இந்தத் தடுப்பூசி ஏற்றப்படும் தினம் பற்றிய விவரங்கள் அப்பிரதேசத்திற்குரிய சுகாதார வைத்திய அதிகாரிகள் மூலம் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு அறியத்தரப்படும்.

தடுப்பூசி அல்லது வேறு மருந்துகளுக்கு ஒவ்வாமை உடையவர்களுக்கு தடுப்பூசி வழங்குவதற்கு யாழ். போதனா வைத்தியசாலையிலும், தெல்லிப்பளை, பருத்தித்துறை, சாவகச்சேரி மற்றும் ஊர்காவற்துறை ஆதார வைத்தியசாலைகளிலும் எதிர்வரும் 31ஆம் திகதி மற்றும் ஓகஸ்ட் மாதம் 07 ஆம் திகதி சனிக்கிழமைகளில் காலை 8 மணி முதல் வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

அவ்வாறான நிலைமைகள் இருப்பதாகச் சந்தேகிக்கப்பட்டு தடுப்பூசி வழங்கப்படாது திருப்பி அனுப்பப்பட்டவர்கள் தமது பிரதேசத்திற்குரிய சுகாதார வைத்திய அதிகாரியின் பரிந்துரைக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டு மேற்குறிப்பிட்ட வைத்தியசாலைகளில் ஏதாவது ஒன்றில் தமக்குரிய தடுப்பூசியைப் பாதுகாப்பாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

தடுப்பூசி வழங்கும் நிலையங்களுக்கு அழைத்து வர முடியாத நிலையில் படுக்கையில் உள்ள நோயாளர்களுக்கு அவர்களது வீடுகளுக்கே சென்று தடுப்பூசி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி நோயாளர்களின் விவரங்களை அவர்களை பராமரிப்பவர்கள் அப்பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். இவர்களுக்கான தடுப்பூசியானது தடுப்பூசி வழங்கும் திட்டத்தின் இறுதி நாள்களில் வீடுகளுக்குச் சென்று வழங்கப்படும் – என்றுள்ளது.

## 1, 688 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்துள்ளார்.

இதையடுத்து நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 99 ஆயிரத்து 874 ஆக எகிறியுள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டிருந்த மேலும் 1,349 பேர் குணமடைந்து சிகிச்சை நிலையங்களிலிருந்து நேற்று வெளியேறியுள்ளனர்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 70 ஆயிரத்து 356 ஆக அதிகரித்துள்ளது என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கை வருகின்றார் சீன நாட்டுப் பிரதமர்



இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு சீனப் பிரதமர் லீ கெக்யோங் இலங்கைக்கு வரவுள்ளார். இவரது விஜயம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 10 திகதி இடம்பெறவுள்ளது.

இந்த விஜயத்தின்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ உள்ளிட்ட தலைவர்களைத் தனித் தனியே சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

சீனப் பிரதமர் துறைமுக நகரின் அடுத்தகட்டச் செயற்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடவுள்ளார். இதன்போது கொழும்பு துறைமுக நகர் நிர்வாக ஆணைக்குழு விவகாரம் மற்றும் சீனாவின் பொறுப்புகள் என்பவை பற்றி உறுதியான தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளன.

அத்துடன், அதற்கான ஒப்பந்தங்களும் செய்யப்படவுள்ளன. கொழும்பு துறைமுக நகர் தொடர்பாகத் தேசிய அரசியலிலும் சர்வதேச அரங்கிலும் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ள நிலையில் சீனப் பிரதமர் இலங்கை வருகிறார்.

துறைமுக நகருக்கு சீனா கொடுத்துள்ள முக்கியத்துவம் மற்றும் எதிர்பார்ப்புகள் என்பவற்றைப் பிரதிபலிக்கும் வகையிலேயே சீன அரசு உயரிய பிரதிநிதியை இலங்கைக்கு அனுப்புகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# முசலியில் சட்டவிரோத காணி அபகரிப்பு தடுத்து நிறுத்துமாறு கோரிப் போராட்டம்

முசலி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இடம்பெறும் சட்டவிரோத காணி அபகரிப்பை தடுத்து நிறுத்தக் கோரி போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

முசலி பிரதேச செயலகத்துக்கு முன்பாக வை.எப்.சி. அமைப்பின் ஏற்பாட்டில் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

பூனாட்சிகுளம், பண்டாரவெளி போன்ற பகுதிகளிலுள்ள அரச காணிகள் தனியார் சிலரால் அடாத்தாகப் பிடிக்கப்படுகின்றன எனவும் இதனால் அப்பகுதியிலுள்ள மக்களுக்கும், இளைஞர்களுக்கும் காணிகள் இல்லாத நிலை காணப்படுவதாகவும் எனவே இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் விரைவில் அடையாளம் காணப்பட்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற விடயத்தை வலியுறுத்தும் வகையிலேயே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மேலும் காணிகளை விடுவித்து காணியில்லாத ஏழை விவசாயிகளுக்கு பகிர்ந்து அளிக்கவும், காணி அத்துமீறலை உடனே நிறுத்து, அடாவடி காணி பிடித்தலை உடனடியாக நிறுத்தவும், அடாத்தாகக் காணி பிடித்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும், எமது பகுதியில் பணம் படைத்தவர்கள் மற்றும் அரசியல் செல்வாக்கு உள்ளவர்களே காணிகளை அபகரிக்கின்றனர் போன்ற பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு போராட்டக்காரர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

# தர்மபுரம் குளங்களில் தண்ணீரில்லை அல்லலுற்று அலையும் கால்நடைகள்

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தர்மபுரம் பகுதியில் அமைந்துள்ள குளங்களில் தர்மபுரம் முதலாம் பகுதியில் அமைந்துள்ள சம்புக்குளம் மற்றும் மூன்றாம் பகுதியில் அமைந்துள்ள ஆலங்குளம் போன்ற குளங்களில் தற்பொழுது வறட்சி நிலைமை காரணமாக தண்ணீரின்றி வறட்ச்சியாக காணப்படுகின்றது.

அதன் காரணமாக அழகிய மலர்கள் அழிந்துவரும் நிலையிலும் கால்நடைகள் தண்ணீருக்காய் அல்லலுறும் சம்பவங்களும் நிகழ்கின்றன.

அத்துடன் இந்தக் குளங்களுக்கு வருடம் தோறும் தண்ணீர் விடுவதற்கான அனுமதியும் நீர்பாசனத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட நிலையிலும் இப்படி ஒரு நிலையின்போது ஒவ்வொரு வருடமும் இக்காலப் பகுதிகளில் நீர் விடுவது வழக்கம். இம்முறை இதுவரையில் தண்ணீர் விடப்படாத கரணத்தால் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். குளங்களுக்கு நீர் வழமையாக வருவதன் மூலம் தாங்களின் வீட்டிலுள்ள கிணறுகளில் நீர் அதிகரிக்கும். அதன்காரணமாக சிறுதானியம் வீட்டுத்தோட்டம் என்பனவற்றை மேற்கொள்ள வாய்ப்புகள் இருந்தன. தற்பொழுது அதற்கும் எவ்வித வழியுமின்றி போயுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். இந்தக் குளத்துக்கான கால்வாய் துப்புரவு பணிகள் மேற்கொள்ள எவரும் முன்வராத காரணத்தால் குளங்களுக்கு தண்ணீர் கொண்டுவருவதில் பலசிரமங்களை எதிர்நோக்குவதாக கமக்கார அமைப்புகள் தெரிவித்துள்ளன. இது தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து தண்ணீர் விடுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்துள்ளனர்.

# பொது இடங்களில் ஆர்ப்பாட்டம்; சி.ஐ.டி. தீவிர விசாரணைகளில்!

பொது இடங்களில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்கள் தொடர்பாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

இது தொடர்பாக ஆராயுமாறு நீதிக்கான மக்கள் அமைப்பின் தலைவர் தனுஷ்க தில்ஷான் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடளித்திருந்தார்.

இதற்கமைய, குற்றப்புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் வெளியிடப்பட்டுள்ள சுகாதார வழிமுறைகளுக்கு எதிராக நோய் பரவும் வகையில் செயற்படுபவர்கள் தொடர்பாக ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.







# பிரபல போதைப்பொருள் வர்த்தகர் காத்தான்குடி பொலிஸாரால் கைது

பிரபல போதைப்பொருள் வர்த்தகர் ஒருவர் 86 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார் எனக் காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துமிந்த நயணசிறி தெரிவித்துள்ளார்.

இதன்போது கைப்பற்றப்பட்ட போதைப்பொருளின் பெறுமதி ஆறு லட்சம் ரூபா எனத் தெரியவருகிறது.

காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புதிய காத்தான்குடி அல்அமீன் வீதியிலுள்ள குறித்த நபரின் வீட்டிலிருந்தே இவ்வாறு போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் வாகனம் திருத்தும் நிலையம் ஒன்றை நடத்தி வரும் இவர் நீண்ட காலமாக



போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டு வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இதன்போது கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மட்டக்களப்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்ட தாதியை கொடூரமாக தாக்கிய பிக்கு!

ஆணமடுவ பிரதேசத்தில், பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொண்ட தாதியை பௌத்த பிக்கு ஒருவர் கொடூரமாகத் தாக்கியுள்ளார்.

பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொண்ட போது கடுமையான வலி ஏற்பட்டதாகத் தெரிவித்து, ஆத்திரமுற்ற பௌத்த பிக்கு மேற்படி தாதியை கண்ணாடி தட்டினால் தாக்கியுள்ளார்.

இந்த தாக்குதல் சம்பவத்தில் தாதியின் தலையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய பௌத்த பிக்குவை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஆணமடுவ ஆதார வைத்தியசாலையின் கொவிட் சிகிச்சைப் பிரிவில் கடமையாற்றி வரும் தாதியொருவரே இவ்வாறு தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

ஆணமடுவ குமாரகம விஹாரையைச் சேர்ந்த பௌத்த பிக்குவே இவ்வாறு தாதியை தாக்கியுள்



ளார். தாக்குதலுக்கு இலக்கான தாதியின் தலையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் மருத்துவர் பத்மினி அபேரட்ன தெரிவித்துள்ளார்.

குறித்த தாதி மேலதிக சிகிச்சைக்காகக் குருநாகல் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.07.2021 இல் வெளியிடப்பெற்றது.